வெளிவந்துவிட்டது

கடவுள் பதும்பாது



ா.அழகப்பன்

செந்தமிழ்ப் பதிப்பகம்


பொன்னி
10-5-49
5



பொன்

மாதம் இரும

ஆசிரியர்:
முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 NA-2 இதழ்

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980
சித்திரைத் திங்கள் 28-ம் நாள்

விலை அணு
10—5—

செய்திப் பாட்டு

நெஞ்சு துடிக்கிறதே!

நெஞ்சு துடிக்கிறதே — ஆ! எம்
நெஞ்சு துடிக்கிறதே!
தஞ்சை வளநாட்டில் — உள்ள
தம்பிக்கோட்டையில் தோன்றிய கணபதி
அஞ்சச் செய்துவிட்டார் — அந்தத்
தொழிலாளர் தலைவனைத் தூக்கிட்டுவிட்டார்
கொஞ்சமும் இரக்கமின்றி — வெள்ளைக்
கொடியர் இயற்றிய தீமையைக் கேட்டதும்
நெஞ்சு துடிக்கிறதே — மலயா
நிகழ்த்திய கொலையின் பயங்கரத்தாலே
... நெஞ்சு துடிக்கிறதே!

பெற்ற தமிழகமும் — அவரைப்
பேணவகையின்றிச் சேனுக் கனுப்பியதோ?
மற்றந்த மலயாவும் — அவர்
மாநிறமேனியின் வேர்வையைக் குடித்ததனல்
சற்றுத் தமிழகத்தின் — குருதி
தன்னை மாந்திச் சுவைக்க நினைத்ததுவோ?
பெற்ற நாட்டரசியலார் — சொன்ன
பேச்சையும் மதியாமல் தூக்கிட்டுவிட்டார்
... நெஞ்சு துடிக்கிறதே!

சற்றுப் பொறுத்திடுவீர் — நீர
விசாரித் தறிந்துபின் மெய்யைத் தெளிந்திடுவீர்
குற்றம் செய்வதில்லை — தமிழ்க்
குருதி படைத்தவர் கொடியர் இல்லையென்று
கற்றுக் கற்றுரைத்தோம் — மலயா
காது கொடுக்கவில்லை; நீதி நிலைக்கவில்லை!
முற்றும் துயரத்திலே — இந்தியா
முழுதும் அழுகுரல் எழுப்பி யொலிக்கிறதே
... நெஞ்சு துடிக்கிறதே!

நாரா நாச்சியப்பன்



உலகம் சிரிக்கும் உறவு

இந்தியா குடியரசாகவே காமன் வெல்த்தில் அங்கம் வகிப்பதென முடிவு செய்திருக்கிறது; இம் முடிவை மற்ற காமன்வெல்த் நாடுகள் ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இப் புது ஏற்பாட்டை நடைமுறைக்குக் கொண்டுவரத்தான் அண்மையில் லண்டனில் காமன்வெல்த் முதலமைச்சர்கள் மாநாடு நடைபெற்றது. இந்திய முதல்வர் பண்டித நேரும் அம்மாநாட்டிற்குச் சென்றிருந்தார்.

இதுவரை குடியேற்ற நாடாக இருந்த இந்தியா, தம் புது அரசியல் திட்டப்படி, குடியரசாக மாறப்போகிறது. அந்த நிலையில் காமன்வெல்த் உறவு எப்படியிருக்க வேண்டுமென்பதைத்தான் லண்டன் மாநாடு தீர்மானம் செய்திருக்கிறது.

புதிதாக ஏற்பட்டுள்ள மாறுதலின்படி இந்தியா அடையும் நன்மை ஏதும் இல்லை; வெறும் வார்த்தை மாறுதல்தான் ஏற்பட்டிருக்கின்றதென்றால் மிகையாகாது. இங்கிலாந்து மன்னர் இதுவரை காமன்வெல்த் நாடுகளின் தலைவர்; அவ்விதி இந்தியாவுக்கும் பொருந்தும். இனி, மன்னரின் அதிகாரம் இந்தியாவிற் செல்லாது. பொது உறவின் அடையாளமாகவே மன்னர் விளங்குவார். இங்கிலாந்து தலைமைநாடு என்ற நிலைமை மாறி இந்தியாவும் இங்கிலாந்தும் சம நிலையில் வருகின்றன.

இம் மாறுதல்களைக் கூர்ந்து நோக்கினால், இவை ஏற்கனவே அமுலுக்கு வந்துவிட்டவைதாம் என்று யாரும் எளிதில் கூறிவிடலாம். எனவே புதுத்திட்டமோ, மாறுதலோ இல்லையென்பது நமக்கு நன்கு புலனாகிறது.

இந்தியா குடியரசாகி விட்ட பின்னும், பிரிட்டனை மற்ற நாடுகளை நடத்துவதைப்போல நடத்துவதான் முறை. பிரிட்டனுக்கென்று தனிச் சலுகைகள் தருவது விரும்பத்தக்க தல்ல. அதற்கு மாறாகப் புது ஒப்பந்தப்படி, இப்பொழுதுள்ள "ஏகாதிபத்தியச் சலுகைகள்" குடியரசு இந்தியாவிலும் பிரிட்டனுக்கு அனுமதிக்கப் படுகின்றன. இங்கேதான் பிரிட்டன் இந்தியாவின் உறவை விரும்புவதன் உண்மைக காரணம் நன்கு தெரிகிறது. பிரிட்டிஷ்காரர்கள் இந்தியாவைக் காமன்வெல்த்தில் இணைந்திருக்கச் செய்ததன் மூலம் தங்கட்குச் சாதகமானதொரு பெரும் வெற்றியைப் பெற்று விட்டார்கள் என்றே கூறவேண்டும்.

இந்தியாவுக்கு இத்தகைய உறவு அவசியமா? இக்கேள்வி இந்தியப் பொதுமக்கள் சிந்திக்க வேண்டிய தொன்று. இரண்டாம் உலகப் போருக்குப் பின் பிரிட்டன் மூன்றாம்தர வல்லரசாக மாறி வலுவிழுந்து நிற்கிறது. அதனோடு இந்தியா உறவு கொள்வதில் பயனென்ன இருக்கமுடியும்? பிரிட்டிஷ் வல்லரசு இந்திய உறவின் பயனைகப் புதுப்பலம் பெறுவதுதான் இயற்கையாக நடைபெறக்கூடிய தாகும். மேலும் பிரிட்டிஷ் காமன்வெல்த் வெள்ளையர்களின் ஒரு ஐக்கிய முன்னணி. அக்குழுவில் ஆஸ்திரேலியா, கனடா, தென் ஆப்பிரிக்கா சேர்ந்திருப்பது இயற்கை. அம் முன்னணியில் இருநூறு ஆண்டுகளாக அடிமைகளாய் வெள்ளையர்களால் நடத்தப்பட்ட பாகிஸ்தானியர்களும், இந்தியர்களும், இலங்கையர்களும் எப்படிச் சேர்ந்திருக்க முடியும்? அப்படிச் சேர்ந்தாலும் அந்த உறவு சமநிலை உறவாக எப்படி அமைய முடியும்?

அயர்லாந்து இங்கிலாந்துக்கு அருகிலுள்ள நாடு. அந்தச் சிறு நாட்டு மக்கள்கூடக் காமன்வெல்த் உறவு அவசியமில்லையென்று முடிவு செய்துவிட்டனர். இத்தகைய சந்தர்ப்பத்திலா, பண்டிதர் நேரு இந்தியாவை இங்கிலாந்துடன் இணைக்கும் முயற்சியில் ஈடுபடுவது?

காமன்வெல்த் உறவு இந்தியாவுக்குக் கடுகளவும் பயனளிக்காது என்று காட்டச் சான்றுகள் நிறைய

உண்டு. மலேயாவில் வீரத்தமிழன் கணபதி தூக்கிலிடப்பட்டதொன்று போதாதா, உறவு சிரிக்கத் தக்க நிலையிருக்கிற தென்பதற்கு! இந்திய சர்க்கார் எவ்வளவோ முயன்றும், வெள்ளை ஏகாதிபத்தியம் அவசர அவசரமாக ஒரு தமிழனின் உயிரைக் குடிக்க முற்பட்டிருப்பதொன்றே காமன்வெல்த் உறவு தங்கள் நன்மைகளுக்குத் தான்என்று பிரிட்டிஷார் கருதியிருப்பதையே காட்டுகிறது. தங்கள் வசதிகுறையாமலிருக்க ஏற்பட்டுள்ள உறவு இதுஎன்பதனைத்தவிர, பொதுஉறவு, ஒருநாட்டுக்கொரு நாடு உதவி புரிவது என்ற தத்துவம் உண்மையிலேயே காரியத்தில் வருமானுல், இந்திய சர்க்காரின் இச்சாதாரண கோரிக்கை கவனிக்கப்படாமல் விடுபட்டிருக்குமா?

இந் நிகழ்ச்சிதான் குறிப்பிடத் தக்கதென்பதல்ல; தென் ஆப்பிரிக்கா இந்தியரின் அல்லல் காமன்வெல்த் உறவால் துடைக்கப்பட்டு விட்டதா என்று கேட்டால் பிரதமர் நேரு என்ன பதில் சொல்லமுடியும்? ஒரே ஒப்பந்தத்திற்குள் கட்டுப்படுத்தப்பட்டுள்ள நாடுகள் தென் ஆப்பிரிக்காவும் இந்தியாவும். இந் நிலையில் தென் ஆப்பிரிக்காவில் இந்தியர்கள், வெள்ளையரல்லாதவர்கள் என்ற காரணத்திற்காகச் சட்ட பூர்வமாகப் படுகின்ற துயரம் சொல்லவொண்ணாதது. இந்நிலைமையில் மாற்றம்காண முடியவில்லையே, காமன்வெல்த் நாடுகள்! பொது உறவின் சின்னமாக விளங்கும் இங்கிலாந்து மன்னரோ, அவர்தம் பிரதமர் அட்லியோ, இந்நிற வேறுபாடு குறித்து வாய்திறந்து ஒரு வார்த்தையேனும் பேசியதுண்டா? அத்துயர் துடைக்க இம்மியளவும் முயன்றதுண்டா? மேலும் அண்மையில் டாக்டர் மலானும் பண்டிதர் நேரும் விருந்து சாப்பிட்டிருக்கிறார்கள். தென்னாப்பிரிக்காவில் வெள்ளையர் பத்திரிகைகள் மலான் நேருவுடன் விருந்துண்டதைக் கண்டித்தன; மலான் படத்தை மட்டும் வெளியிட்டு நேரு படத்தை மறைத்தன. இத்தகைய ஏகாதிபத்திய வெறியர்களின் மத்தியில் இந்தியா இணைந்திருக்க முடிவு செய்தது பெரும் தவறு என்பதே நம் கருத்து.

நேரு செய்த முடிவு விசித்திரம் நிறைந்தது; யாரும் புரிந்துகொள்ள முடியாதது; காமன்வெல்த்துடன் இந்தியா உறவு கொள்வது தேவையற்ற ஏற்பாடு; உலகம் சிரிக்கிறது இந்த உறவைக் கண்டு!

காலமும் கருத்தும்

மே தினம்

பாட்டாளி மக்களின் ஒரே திருநாளான மே தினம் உலகமெங்கும் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டிருக்கிறது. அறுபது ஆண்டுகளாகத் தொழிலாளர்களின் உரிமையுணர்வுக்கு உரமளிக்கும் நாளாக இம் மே தினம் விளங்கி வருகிறது. மாஸ்கோவில் பத்துலட்ச மக்களின் அணிவகுப்புடன் மே தினம் சிறப்புற்றிருக்கிறது. அப்போது "செஞ்சேனை ஆக்கிரமப்பில் இறங்காது" எனற முழக்கம் வானைப் பிளந்ததாம். இவ்வகையில் பேச்சில் மட்டுமின்றிச் செயலிலும் ரஷ்யர் தங்கள் சமாதான ஆர்வத்தைக் காட்ட முனைந்திருக்கின்றனர். அண்மையில் பெர்லின் முற்றுகை நீக்கம்பற்றி ஏற்பட்டுள்ள உடன்பாடே ரஷ்யாவின் சமாதானக் கொள்கைக்குப் போதுமான சான்றாகும். அமெரிக்காவும் இந் நல்லுறவின் பொருளைச் சரியாகப் புரிந்து கொண்டு நடக்குமானால் உலகப்போர் இல்லையென்றாகிவிடும். இந்த ஆண்டு மே தினம் உலகப் பாட்டாளிகளின் விடுதலைக்கும், உலக அமைதி நிலவுவதற்கும் கொடியேற்றம் செய்யும் நாளாக அமையுமாக!

வாழ்த்துகிறோம்

அண்ணாமலை நகர்த் திராவிட மாணவர்கள் கடலூர் மாஜிஸ்திரேட்டால் விடுவிக்கப் பட்ட செய்தி அறிந்து மிகவும் மகிழ்ச்சி அடைகிறோம். பரங்கிப்பேட்டை நீதிமன்றம் அவர்களைக் குற்றவாளிகளெனத் தீர்ப்பளித்ததைக் கண்டு திராவிட மாணவர் உலகமே கொதித்தெழுந்தது! "அநீதி அநீதி" என்று நேர்மையாளர் அனைவரும் கூறினர். காங்கிரஸ் மாணவர்களின்மீது தொடுக்கப்பட்ட வழக்கைமட்டும் திரும்பப் பெற்றிருக்கும்போது திராவிட மாணவர் மீதுள்ள வழக்கை மட்டும் தொடர்ந்து நடத்தியது முதல் அநீதி! பின்னும் நடந்த வழக்கில் தீர்ப்பளிக்கப் பட்டவிதம் இரண்டாவது அநீதியானது! இந்த அநீதிகள் கடலூர் மாஜிஸ்திரேட்டால் நீக்கப் பட்டு, வெற்றி வீரர்களாக, மாசற்ற மணிகளாகத் திராவிட மாணவர்களும் சிதம்பரம் திராவிடக் கழகத் தலைவரும் அறமன்றத்தில் அறிவிக்கப்பட்டது கண்டு, அவர்களை வாழ்த்துகிறோம்!



வம்பு மடம்

—ஆண்டி—

ரமணர் ஆசிரமத்தில் குகையைத் திறந்து வைக்க நம் கவர்னர் ஜெனரல் ராஜகோபாலச்சாரியார் திருவண்ணுமலேக்கு அடுத்த வாரம் வருகிருர். முன்பு சென்னை வந்தபோது 'ராஜாஜி' க்கு நடந்த 'அமோக வரவேற்பு' அனைவரும் அறிந்ததுதான். அந்த வரவேற்பு வைபவத்தை, நாம் மறந்து விட்டாலும், கவர்னர் ஜெனரல் மறந்துவிட முடியுமா என்ன?

அவர் மறக்கவில்லை என்பதற்கு ஆதாரம் தட்டுப்படுகிறது; சென்ற தடவை கூண்டோடு திராவிடக்கழகத் தலைவர் பெரியார் உட்பட நூற்றுவரை முன்னேற்பாடாக கைது செய்து சிறையிலடைத்து விட்டு ராஜகோபாலாச்சாரியாரை வரவேற்கச் சென்ருர்களல்லவா, சென்னை சர்க்கார்! ஆம், பெரியார் இராமசாமி சிறையில் இருந்தார்; கவர்னர் ஜெனரல் ஆச்சாரியார் பலத்த போலீஸ் பந்தோபஸ்துக் கிடையே வரவேற்புப் பெற்ருர். இவை சென்னை செல்லத் திட்டமிடும் ஆச்சாரியாரின் நினைவில் அப்படியே படம்பிடித்ததுபோல் தோன்றியிருக்க வேண்டும்; [பத்திரிகைகளில் வந்திருக்கும் செய்தியை உண்மையென்று நம்பினல் நாம் கூறுகிறபடிதான் நடந்திருக்க வேண்டும்] உடனே பெரியாருக்குக் கடிதம், எழுதினர், "உங்களைச் சந்திக்க வேண்டு" மென்று. பெரியாரைச் சிறையில் வைத்துக் காரியம் நடத்துவதைவிட அவரைச் சந்தித்து ஆவன செய்வதே மேல் என்ற அளவுக்கு அவர் மனப்பான்மை மாறியிருக்கிறது என்பதையே இந் நிகழ்ச்சி காட்டுகிறது. உண்மையாகவே ஆச்சாரியார் தந்திரசாலிதான்! சந்திப்பு நிகழட்டும். விளைவுகளைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

சென்னை மந்திரிசபையை விரிவுபடுத்துவது இப்போதைக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. பிரதமர் குமாரசாமி ராஜா இரண்டு இடம் தருவதாய்ச் சொல்ல பிரகாசம்காரு "போதாது; எங்கள் கோஷ்டியின் பலத்திற்கேற்ப மந்திரிகளை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று கூற, புதுமந்திரி நியமனம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. பாவம் டாக்டர் சுப்பராயன் மந்திரியாகும்காலம் இன்னும்வரவில்லைபோலும்! பிரகாசம்காரு இப்போ

லைதய மந்திரி சபையை எதிர்த்துப் போர்க்கோலம் பூண்டிருக்கிறார்; சில மந்திரிகளின் மீது குற்றச்சாட்டுகளை அள்ளிவீசியிருக்கிறார்; அவர்களை யெல்லாம் வீட்டுக்குப்போகச் சொல்ல வேண்டும் என்று ஆத்திரப்படுகிறார்; இந்த மந்திரிசபையையேகலைத்து விட்டுப் புதுமந்திரிசபை ஏற்படுத்த வேண்டுமென்று கிழக்குப் பஞ்சாப் மாகாணத்தை உதாரணம் காட்டுகிறார். புதுப்பிரதமரோ "இவர் யார்? அந்த மந்திரியைப் போடு, இந்த மந்திரியைப் போடு என்று சொல்லப் பிரகாசம் யார்?" என்று பத்திரிகை நிருபர்களிடம் கேட்கிறார். இப்படியாகச் சென்னைக் காங்கிரஸ் சட்டசபைக் கட்சி விவகாரம் அறையிலிருந்து அம்பலத்திற்கு வந்திருக்கிறது. அறையில் சந்தித்துச் சந்தித்துப் பேசிப் பேசிப் பயனற்றுப்போகவே அவரவர்கள் போக்கில் பத்திரிகைகளில் அறிக்கைவிடத் தொடங்கி விட்டார்கள். மேலிடத்திற்குப் பிரகாசம் மனுப்போட்டிருக்கிறார். அந்த மனு தள்ளுபடியாகுமென்று காம்ராஜ் நிச்சயமாக எதிர்பார்க்கிறார்; பிரகாசம் காரு நினைவிலோ, அவர் மனு டில்லியில் கிடைப்பதும், குமாரசாமி ராஜாவை டில்லிக்கு அழைப்பதும், "உடனே கலை உன் மந்திரி சபையை" என்று படேல் அவருக்கு உத்தரவிடுவதும், நாடகத்தில்வரும் காட்சிகள் போல ஒன்றன்பின் ஒன்றாகத் தெரிகின்றன. இந் நாடகங்கட்கு ஒரு முடிவில்லையா என்று எதிர்பார்த்திருக்கும் பொது மக்களுக்குக் காமராஜ் பிரகாசம் அளிக்கும் விடையென்ன என்றுதான் நமக்குப் புரியவில்லை. பழையபடி நம்பிக்கையில்லாத் தீர்மானம், புது மந்திரிசபை அமைப்புகள் நடைபெறுமானாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. ஏனெனில் வெள்ளைக்காரனை வெளியேற்றிய பிறகு சுயராஜ்ஜிய வீரர்களின் நித்திய அலுவல் அதுவாகத்தானே மாறிவிட்டது!

இவ்வாறு பிரதமர் குமாரசாமி ராஜா சிலருக்கு மந்திரி பதவி கொடுத்துக் கட்சிமனப்பான்மையை ஒழித்துக்கட்டலாமென்று எண்ணியது வீணாயிற்று; "அதிகப்படி வேலையிருக்கிறது என்பதற்காக அதிகப்படி மந்திரிகள் அல்ல; அப்படியாவது சிலரைத் திருப்திப்படுத்துவோம் என்பதற்காகத்தான் நானும் மந்திரி சபையை விரிவுபடுத்தச் சம்மதித்தேன்" என்று அவர் கூறியிருப்பது முற்றிலும் உண்மை. அதே போன்று புதுக்கோட்டைப் பகுதிக்குச் சென்னை சட்டசபையில் ஒரு ஸ்தானம் கொடுக்கப் போகிறார்களாம்; இந்த ஏற்பாடும் திருப்திப்

படுத்தும் முயற்சி வகையைச் சேர்ந்ததுதான். புதுக்கோட்டையிலிருந்து ஒரு ஸ்தானம் பற்ருது, மூன்று வேண்டுமென்று பலர் அறிக்கை விட்டிருக்கிருர்கள். சென்னை சர்க்காருக்கு என்ன குறைந்துவிடப் போகிறது! நியமனம்தான செய்யப் போகிருர்களாம்! மூன்று பேராக நியமனம் செய்துவிட்டால், மூன்று பேருடைய திருப்தியைப் பெறலாமல்லவா?

சிலருக்கு இப்போது திராவிடக் கழகத்தைத் திட்டுவதிலே திருப்தி ஏற்பட்டிருக்கிறது. அந்தக்கோஷ்டியிலே டாக்டர் வரதராஜுலு நாயுடு சேர்ந்திருப்பதுதான் நமக்கு வருத்தமாயிருக்கிறது. இந்துமகா சபையை நாடே கைகழுவி விட்டது; இந்துமாக சபையோ அதற்கு முன்னரே வரதராஜுலு நாயுடுவைக் கைகழுவி விட்டது. இந்த நிலையிலும் நாயுடுவால் மட்டும் என்னவோ இந்துமகா சபையையும் இந்துக்களையும் மறக்கவே முடியவில்லை! திராவிடர்கள் இந்துக்களில்லை என்று பெரியார் சொல்லுகிருராம்; பிராமணர்களின்மீது துவேஷப் பிரசாரம் செய்கிருராம; தனிநாடு வேண்டு மென்கிருராம். இந்தக் கிளர்ச்சிகளை வளரவிடக்கூடாதாம்; முளையிலேயே கிள்ளி எறிய வேண்டும என்று சென்னை சர்க்காருக்கு அவர் ஆலோசனை கூறுகிருர்! தோழர் குமாரசாமி ராஜா பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதும் அவருக்கு "ஐந்துமந்திரி போதும்" என்று ஆலோசனை கூறியவர் டாக்டர் நாயுடுதான்! இவ்வாறு அவர் சென்னை சர்க்காரின் 'கௌரவ ஆலோசகராக' இருப்பதில் நமக்கொன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனல் செல்லாக்காசுகளாகி விட்ட, திரும்பத்திரும்பச் சொல்லியும் நாட்டுமக்கள் ஏற்றுக் கொள்ள முடியாமலிருக்கிற சொத்தை வாதங்களையும் குற்றச் சாட்டுகளையும் கழகத்தின் மீது அவர் வீசாமல் இருப்பாரானல் அவருடைய பெருமைக்கு உயர்வாகுமென்று கூறவிரும்புகிருேம்.

பம்பாய் மந்திரி ஒருவரிடம் "படிக்க மண்ணெண்ணெய் கிடைப்பதில்லை" என்று ஒரு மாணவன் புகார் செய்தானும். மந்திரி உடனே என்ன செய்தார் தெரியுமா? "உனக்கு எவ்வளவு மண்ணெண்ணெய் வேண்டும்? நான் தரச் சொல்கிறேன். நீ படித்தால் போதும்" என்று பதில் கூறியிருப்பார் என்றுதானே நீங்கள் நினைக்கிறீர்கள்! அவ்வளவு பைத்தியக்காரத்தனமாக அவர் நடந்துகொள்ளவில்லை. "தம்பி! வீதியில் விளக்கு இல்லை! நீ பார்த்ததில்லையா? அங்கேசென்று அஃதன் வெளிச்சத்தில் படி நானும் அப்படிப் படித்தவன் தானுக்கும்" என்று முதல்தரமான யோசனையை அவனுக்குக் கூறியிருக்கிருர். அந்த மாணவனும் திருப்திப்பட்டிருக்கத்தான் வேண்டும். "வீதிவிளக்கில் படித்தால்தான் மந்திரியாகலாம் போலும்!" என்ற ஒரு எண்ணம் அந்தச் சின்ன உள்ளத்தில் தோன்றினல் நாம் வியப்பதற்கில்லை. "மந்திரியாவதற்குக் கம்பி மட்டும் அறுத்தால் போதாது; முனிசிபல் விளக்கிலும் பாடம் படித்திருக்கவேண்டும்" என்று சட்டம் மாறுதல் செய்யப்படுமானலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை

கருகிய
- மலர் -

கிறிஸ்து கோவிலின் பின்புறம் அடர்ந்து செழிப்பாக வளர்ந்து நின்ற வேப்பமரத்தினடியில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தேன். என் கையில் ஷேக்ஸ்பியர் புத்தகம் பிரிக்கப்படாமலிருந்தது. அதைப்பிரித்துப் படிக்க மனம் ஓடவில்லை. தனிமையான ஓரிடத்தில் சென்றமர்ந்து நிம்மதியாகப் படிக்கலாமென்றெண்ணியே அவ்விடத்தைப் பொறுக்கியெடுத்தேன். ஆனால் என் மன அமைதியை அந்த 'இடம்' ஒரேயடியாகக் கலைத்துவிட்டது!

வேப்பமரத்தினருகிலேதான் கிறிஸ்து கோவிலின் கல்லறைத் தோட்டமிருந்தது. என் கண் முன்னே இறந்து அடக்கம் செய்யப்பட்டவர்களின் கல்லறைகள் காட்சியளித்துக் கொண்டிருந்தன; எத்தனையோ ரகமான கல்லறைகள். அதனதன்மீது நாட்டப்பட்டிருந்த சிலுவைகள் என் மனத்தில் சஞ்சலத்தையுண்டுபண்ணின. ஒவ்வொரு கல்லறைக்கிடையேயும் முன்னேயும் பற்பலவகைச் செடிகள் நடப்பட்டு வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கின்றன. 'ஓர் நந்தவனம் தானே?' என்று சந்தேகமுறும்படி மிக அழகாயிருந்தது. 'மரித்தவர்கள் புதைக்கபபட்டவிடம்' என்ற அருவருப்போ, பயமோ தோன்றவில்லை. மிகவும் சுத்தமாகவும் கவர்ச்சியாகவும் காணப்பட்டது.

ஆனால் ஏனோ அந்தச் சிறு சிறு சிலுவைகள், மனத்தில் புதைந்து கிடக்கும் பழைய இன்ப துன்ப நினைவுகளைத் தட்டியெழுப்புவனவாயிருந்தன!

ஐந்து ஆண்டுகளுக்கு முன் இறந்துபோன தமையனின் ஞாபகம் குமுறி எழுந்தது. கன்னத்தில் வழிந்தோடிய கண்ணீரைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தேன். எனக்கு வெகு சமீபத்திலிருந்த வெள்ளைநிறக் கல்லறையை நோக்கினேன். அதைச் சுற்றி ரோஜாச் செடிகள் நடப்பட்டிருந்தன. நான் அந்தக் கல்லறையில் எழுதப்பட்டுள்ளதை வாசிக்க முயன்றேன்.

"பால் டேவிட் (வயது 25). ...."

என்னால் அதற்குமேல் வாசிக்க முடியவில்லை. 25 வயது! கட்டுக்கடங்கா வாலிப வயதில் மரிப்பதென்றால்......? என் நெஞ்சம் குமுறியது. எனக்கும் அதே வயதுதான்! ஒருவேளை ...... யாரோ குளிர்ந்த கையால் என் தொண்டையை நெரிப்பது போல் பிரமை தட்டவே, புத்தகத்தை எடுத்துக்கொண்டு கிளம்ப முயற்சித்தேன். ஆனால் அதே சமயத்தில் என்னை அங்கே உட்காரவைக்கும்படியான ஒரு சம்பவம் நடந்தது. சுமார் 45 வயதிருக்கலாம்; ஒரு பெண் கையில் ஒரு

கூடை ரோஜா மலருடன் அங்கே தோன்றினாள். என்னை அவள் கவனிக்க வில்லே. நேரே பால் டேவிட்டின் கல்லறைக்குச் சென்று அந்த மலர்களால் சிலுவையையும் கல்லறையையும் அலங்கரித்தாள். அலங்காரம் முடிந்ததும் நிமிர்ந்து பின் திரும்பி நோக்கினாள். அப்போதுதான் அவள் கண்கள் என்மீது விழுந்தன. அந்தக் கண்களினின்று நீர் 'குபுகுபு'வென்று பெருகிக்கொண்டிருந்தது.நான் மௌனச் சிலேபோல் உட்கார்ந்து அவளேயே பார்த்துக் கொண்டிருந்தேன். அவளது தலைமயிரெல்லாம் ஏறக்குறைய நரைத்துவிட்டது. முகத்தில் ஆங்காங்கே சுருக்கங்கள் வீழ்ந்து 'கிழடு' தட்டிவிட்ட போதிலும் அந்த முகம் மிகவும் அழகாயிருந்தது. நல்ல சிவப்பு நிறம்; பெரிய கண்கள். இளமையில் மிகவும் அழகாக இருந்தவளென்றும், கவலேயினாலும் வேதனையாலும் அடிபட்டவளென்றும எனக்குப் புரிந்தது.

என்னைப் பார்த்ததும் திடுக்கிட்டவள்போல் நின்றாள் அவள். பிறகு மனத்தைத் திடப்படுத்திக்கொண்டுஎன்னே நோக்கி மெதுவாக வந்தாள். என்னிடம் ஏதோ வேண்டிவருபவள்போல் தோன்றவே நிமிர்ந்து, "என்னம்மா வேண்டும்?" என்று கேட்டு வைத்தேன். அவள் பெருமூச்செறிந்தாள். பிறகு பழகியவள் போல் என் அருகில் சர்வசாவதானமாக உட்கார்ந்து கொண்டாள்.

"ஒன்றுமில்லே......அந்த..... அந்த......பூ போடுவதற்காக வந்தேன்!" என்றாள் தட்டுத் தடுமாறியபடியே. அவளுடைய வெளிறிய உதடுகள் துடித்தன. புடவைத் தலேப்பால் மூக்கைத் துடைத்துவிட்டாள்.

"அது...அது யார் அம்மா? உங்கள் மகனா?" என்று கேட்டேன்.

அந்தப் பெண் நிமிர்ந்தாள். என்னே வெட்டி விடுவதுபோல் ஒரு பார்வை பார்த்தாள். பிறகு, "இல்லே!" என்று பதிலளித்தாள்.

என் முகத்தில் அசடு தட்டியிருக்க வேண்டும். கல்லறை மீது பார்வையைச் செலுத்தினேன். "பிறப்பு 188?-இறப்பு 1924..." என்று எழுதப்பட்டிருந்ததை அப்போதுதான் கண்டேன்!

"என்ன உறவு உங்களுக்கு?"

"உறவா! அவர் என்...... என்...காதலர்! நிரந்தரமாக என் இதய ஆழத்தில் உறைந்தவர்...தம்பீ! அவர் இறக்கவில்லே! நான் இறக்கும்வரை அவர் இறக்கமாட்டார்! அவர் என் இதயத்தில் வாசம் செய்கிறார்! அழியும் அவரது சடலமே இறந்துபோனதன்றி அவரது உயிர் இறக்கவில்லே! ஏனெனில் அவரது உயிரே தான் எனது உயிர்!" என்று ஆவேசமாகப் பேசியவள் மடமடவென்று அழுதுவிட்டாள். அவளேத் தேற்ற முடியாது திணறிய நான், விரிந்த கண் மூடாது அவளே மிரள மிரள நோக்கினேன்; அவளுக்காக மிகவும் பச்சாதாபப்பட்டேன். ஆனால்நான் இளேஞன். என்னால் அவள் என்ன ஆறுதல்

பெறமுடியும்? கண்ணீர் நின்றதும் அவள் கண்ணைத் துடைத்துவிட்டு நிமிர்ந்தாள்.

"தம்பி! உன் பெயரென்ன?"

"ஜோஸப்......ஜோஸப் ஸ்டீபன்......"

"ஹூம், ஜோஸப்! உன்னைப் போலத்தான்..."

நான் சட்டென்று நிமிர்ந்தேன். அவள் எங்கோ பார்த்தபடி தொடர்ந்தாள்.

"உன்னைப்போலத்தானிருப்பார் அவரும். அதனால்தான் எனக்கு அந்த நிகழ்ச்சியை உன்னிடம் சொல்லிவிடலாம் போலிருக்கிறது!"

"தயங்காமல் சொல்லுங்கள் அம்மா! மனிதனாகப் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் வாழ்க்கையில் ஒரு சோக நாடகம் நடக்கவேண்டியதாய்த் தானே இருக்கிறது...!"

"தம்பி! 'பைத்யக்காரி நம்மிடம் வந்து இதெல்லாம் சொல்கின்றாளே' என்று நினைக்காதே! நான் பைத்யக்காரியல்ல! வாழ்க்கையில் தவறிப்போய்ச் சீரழிந்தவளுமல்ல! ஆனால் அவருடைய தாய் அவள் என்னை அப்படித்தான் எண்ணினாள்! அவள் என்னை ஏன வெறுத்தாள் தெரியுமா? காரணம சொல்கிறேன்; என், தந்தை இளமையிலேயே பெற்றோரை இழந்து இலங்கைக்குச் சென்றுவிட்டார். ஜாதியில் 'சுத்த' வேளாளராம். ஆனால் அவர் ஒரு சிங்களப் பெண்ணைக் காதலித்தார். புத்தமதத்தவராகையால் அதை அவளுடைய பெற்றோர் விரும்பவில்லை. ஆதலால் அப்பா அவளை இரகசியமாக இந்தியாவிற்கு அழைத்து வந்துவிட்டார்; தமது சொந்த ஊரில் இல்வாழ்க்கை ஆரம்பித்தார். அவர்களது இன்ப வாழ்வை மெருகுபடுத்த நான் ஒருத்தி பிறந்தேன். என்னை மிகவும் செல்வமாக வளர்த்து 'செல்லா' என்ற பெயரையே இட்டனர். எனக்கு 12 வயது நடக்கையில் அப்பா இறந்துவிட்டார். அவர் வைத்துவிட்டுப்போன வீடு, நிலபுலன்களைக் கொண்டு கௌரவமாக வாழ்க்கை நடத்தினாள் என் தாயார். அவளைப் பற்றி ஊரார் அவதூறுகள் பேச ஆரம்பித்தனர். ஆனால் உத்தமியாகிய என் தாயார் அதைப் பொருட்படுத்தாது—துயரை வெளிக்காட்டாது—என்னைப்பட்டணத்திற்கனுப்பி மேலே படிக்க வைத்தாள். பட்டணத்தில் ஒரு நாள்...... அந்த நாளை என்னால் ஒரு போதும் மறக்க முடியாது தம்பி—! கடற்கரையில் பால் டேவிட்டைச் சந்தித்தேன்.

மந்திரியின் பிரமாணம்

பத்திரிகை பார்த்துக்கொண்டிருப்பவர்:— ஏன் சார், புது மந்திரி பிரமாணம் செய்தார் என்று போட்டிருக்கிறதே! மந்திரி என்ன பிரமாணம் செய்வார்?

நண்பர்:— என்ன, சொல்லியிருப்பார்! "இனிமேல் நான் இந்த மந்திரிசபைக்குத் தொல்லை கொடுக்க மாட்டேன். சத்தியம்" என்றுதான்.

அம் முதல் சந்திப்பிலேயே என் உடல், உயிர், அன்பு அத்தனையையும் அவர் . பாதத்தில் அர்ப்பணித்துவிட்டேன்........ மேலே வளர்த்துவானேன்? நாங்களிருவரும உயிர்க்காதலராகி விட்டோம்...... தினமும் மாலே வேளேகளில் கடற்கரையில் நாங்கள் சந்திக்கத் தவறுவதில்லே. வளர்பிறைபோல் வளர்ந்த எங்கள் சத்தியக் காதலேக் கட்டுப்படுத்த முடியாத நிலேயேற்பட்டு விட்டது.

'உன்னேயன்றி பிற மாதரைக் கண்ணாலும் பார்க்கமாட்டேன்' என்று சபதம் செய்திருந்தார் பால். பாலின் பெற்ருேர் பரம்பரை பணக்காரர். ஊரில் நல்ல செல்வாக்கு அவர்களுக்கு. அவருடைய தாய் ஈவிரக்கமற்ற அரக்கி! அவளுக்கு என்னேத் துளியேனும் பிடிக்கவில்லே. 'என் அம்மா ஒரு சிங்களத்தி' யென்றும், 'கெட்ட நடவடிக்கைக்காரி' யென்றும்; 'அப்பேர்ப்பட்டவளின் மகள் தன் பையனுக்கு வேண்டியதில்லே' யென்றும் கூறிவிட்டாள். எங்கள் திருமணத்திற்கு அவள் சம்மதிக்கவில்லே. தன் சம்மதத்தை மீறித் தன் பையன் நடந்துகொண்டால், தான் தற்கொலே செய்துகொள்வதாகவும் வேறு பயமுறுத்தினுள்! பாவம், பால் என்ன செய்வார்? ஒரு புறம் பெற்ற தாய்-மறுபுறம் ஆசைக் காதலி. யாருக்காக அவர் பரிந்து நிற்பார்? ஆனல் அவர் சத்திய வீரர். சத்தியத்தைக் காப்பாற்றத் துணிந்துவிட்டார். மணந்தால் என்னேயே மணப்பதாகவும் அல்லது பிரம்மச்சாரியாக இருப்பதாகவும் ஒரேயடியாகப் பிடிவாதம் பிடிக்கவே, வேறு வழியின்றி அவரது பெற்ருேர் - முக்கியமாகத் தாயார்—சம்மதித்தனர். ஆனல் ஒரு நிபந்தனேயின் பேரிலேயே! 'கல்யாணத்தை இந்தியாவில் வைத்து நடத்தக்கூடாதென்றும் இலங்கையில் வைத்து நடத்த வேண்டு' மென்பதே அந்நிபந்தனே. மகனது கல்யாணத்திற்கும் குடும்பத்திலிருந்து யாரும் போகக் கூடாதென்றும், அவர் மட்டிலுமே போய்த் தாலியைக்கட்ட வேண்டுமென்றும் பெற்ருேர் ஏற்பாடு செய்தனர்! பாவம், என் காதலர் அதற்கு இசைந்தார்.

என் அம்மாவுக்கும் அது விருப்பமாகவே பட்டது, இலங்கையிலிருக்கும் என் அம்மாவின் குடும்பத்தார், முன்பே அவளிடமுள்ள பகைமையை விட்டொழித் திருந்தனர். 'நடந்தது நடந்துவிட்டது; நீ இனிமேல் இங்கே தடையின்றி வரலாம்' என்று அம்மாவை அழைத்திருந்தனர். ஆகவே சமயம் வாய்த்ததென்று அம்மா திருமண ஏற்பாடுகள் செய்யலானுள். எனக்கோ ஒரே உற்சாகம். நானும் அம்மாவும் பாலும் சேர்ந்து இலங்கைக்குப் புறப்பட்டோம். கப்பலினின்று இறங்கியதுதான் தாமதம், ஊரிலிருந்து பாலுக்கு ஒரு தந்தி வந்து சேர்ந்தது. 'அம்மா இறந்துவிட்டாள். உடனே வரவும்' என்று அதில் கண்டிருந்தது! கலியாணத்தை நிறுத்திவிட்டு அவர் மறு கப்பலில் ஊருக்குப் புறப்பட்டார். போகுமுன் என்னிடம் விடைபெறுகையில் அவர் என்னேப் பார்த்த பரிதாபமான பார்வையும், கண்களில்

டிவேலரா சிரிக்கிறர்!

1921 டிசம்பர் மாதம் அயர் லாந்து பிரதிநிதிகளின் தலே வரான ஆர்தர் கிரிப்த் பிரிட் டிஷ்பிரதமர்லாயிட்ஜார்ஜிடம் அயர்லாந்தின் சுதந்திரத்தை வற்புறுத்தி பிரிட்டிஷ் மன் னர் பெயர் அயர்லாந்து அர சியலமைப்பில் இருக்கக் கூடாதென்ருர். பின்னர், பிரிட்டிஷ் ராஜதந்திரத்தில் மயங்கி ஒப்பந்தத்தில் கையெ ழுத்திட்டு விட்டார். உடனி ருந்த அயர்லாந்து பிரதிநிதி மைக்கேல் காலின்ஸ் வெறுத் தார். இதை "மைக்கேல் காலின்ஸ் இதைக்கேட்டதும் யாரையோ சுடுவதற்கு எழுந்து நிற்பவர்போல திடீ ரென எழுந்து நின்ருர். தன் னேயே சுட்டுக்கொள்ளத் தான் விரும்புகிருர்போல இருந்தது. என் ஆயுளிலேயே மைக்கேல்கேல் காலின்ஸ் முகத்தில் அப்போது தென் பட்டது போல வேறு யார் முகத்திலும் பாத்ததில்லே," என்று சர்ச்சில் வர்ணிக்கிருர்.

இப்பிரதிநிதிகள் ஏற்படுத் திய கறையைப் "பிரிட்டிஷ் மன்னரின் பெயர் அயர்லாந்து அரசியலமைப்பில் இருக் கவே கூடாது" என்று 1936 டிசம்பர் 11ல் அயர் பார்லி மெண்டில் சட்டம் செய்து துடைத்தார் டிவேலரா.


1949 மே மாதம் இந்தி யாவைப் பிரிட்டிஷ் காமன் வெல்த்தில் இணைத்து, பிரிட் டிஷ் மன்னரை அதன் தலே வராக ஏற்றுக்கொண்டு காமன்வெல்த் ஒப்பந்தத்தில் பண்டித நேரு கையொப்ப மிட்டுவிட்டார்.

துளிர்த்த துயரக் கண்ணீரும் என்றென்றும் என் மனத்தை விட்டு அகலாத காட்சிகள் தம்பி!

ஊரில் என் காதலருக்கு அதிசயம் காத்திருந்தது! உண்மையில் அவரது தாயார் இறந்துவிடவில்லே! எங்கள் கலியாணத்தை நிறுத்தி அவரை ஊருக்கு வரவழைக்க இழைத்த கொடூர தந்திரம் அது! அம்மா செய்த துரோ கம் பாலின் மூளேயைக் குழப் பியது... தம்பி... என் காதலர் சித்தப்பிரமை அடைந்துவிட் டார்...! அம்மாவை உயிரோடு கண்ட கணத்திலேயே சுயபுத் தியை இழந்துவிட்டார் அவர்! அந்த பயங்கரமான அதிர்ச்சி எங்கள் காதிலும் எட்டியது! அம்மா அதன் பிறகு என்னே நெடுநாட்கள் வைத்துக்கொண் டிருக்கவில்லே. கண்டியில் 'டிரி னிட்டி' காலேஜில் ஆசிரியர் வேலே பார்த்துவந்த வில்சன் என்ற தமிழ் இளேஞருக்கு நான் வாழ்க்கைத் துணேவி யாக்கப்பட்டேன். திருமணத் திற்குப் பிறகு சில தினங்களுள் அம்மாவும் இறந்து விட்டாள். சொத்து வியவகாரங்களேக் கவனிக்கும்பொருட்டு நான் என் கணவருடன் இங்கு வந்துவிட்டேன். அவருக்குக் கிறிஸ்டியன் ஹைஸ்கூலில் வேலே கிடைத்தது.

நான் ஊருக்குத் திரும்பிய செய்தியை எவ்விதமோ அறிந்துகொண்ட பால், ஒரு தினம் வீட்டிற்கு வந்துவிட் டார்! அப்போது என் கண வரும் வீட்டிலிருந்தார். என் காதலரைக் கண்டதும் பேரிடி விழுந்தாற்போலிருந்தது.

[அடுத்த இதழில் முடியும்]



பதினான்காம் அத்தியாயம்

உண்மை ஊழியன்

காளி கோயில் வழியே முடீன் கான் குதிரையைச் செலுத்தியதைக் கண்ட அஜிஸ்கான் வியப்படைந்தான். ஏனெனில் அவ் வழியில் அவன் வெகு நேரமாக நின்றுகொண்டிருந்தான். அந்தக் காளிகோயிலுக்குப் பூசைக்கு யாரும் விரும்பிப் போவதில்லை, எப்போதோ ஒரு சமயம் அங்கு கூட்டமிருக்கும். அதுவும் பகலில் தானிருக்கும். இரவு நேரத்தில் யாரும் இருக்கமாட்டார்கள்.

அன்று சோணிசந்த் சென்றான் முதலில்; அவனை அஜிஸ்கானுக்கு நன்றாகத் தெரியும். அஜிஸ்கான் ஒரு சாதாரணமான சிப்பாய். அதுவும் முடீன்கானின் சிபார்சினால் வேலை யேற்றவன். ஆகவே முடீன்கானைத் தெய்வமாக வழிபடுவான். அவன் வாடிக்கையாக மாலை வேளைகளில் அந்தக் காட்டிற்குள் வருவது வழக்கம். வேலை நேரமாக இல்லாவிட்டால் வெகு நேரம் அங்கேயே தங்கிவிடுவான். பொழுது போக்குக்கு மட்டுமல்ல, ஏதேனும் திருட்டு, கொலை முதலியவை நடத்தத் திட்டமிட வசதியான, இடம் அதுதான். ஆகையால் அவனுக்குத் துப்புக்கண்டுகொள்ளவும் வசதியிருந்தது.

சோணிசந்த் அடிக்கடி காளி கோயிலுக்குப் போவதே அதிக சந்தேகத்திற்குக் காரணமாக அமைந்தது. மேலும் அமீன் சந்த் பற்றிக் கொஞ்சமும் நல்லெண்ணம் கிடையாது அவனுக்கு. அவர்கள் இருவரும் ஏதோ சூது செய்கிறார்கள்

அரசாங்கத்திற்கு எதிராக, என்று மட்டும் உறுதியாக நம்பியதால் அவனைக் கண்டதும் அவனைப் பின் தொடரவேண்டும் என்று ஆசைப்பட்டான். சிறிது நேரத்திற்குள்ளாகவே இரண்டு பெண்கள் வேறு அந்த வழியில் நுழையவே சந்தேகம் வளர்ந்தது. பிறகு தான் முடின் வந்தான். அங்கு என்ன நடக்கப் போகிறது என்று அறிய ஆவலாக இருந்தாலும் முடின் கண்டுகொண்டால் ஒரு வேளை கோபிப்பானோ என்று பயந்துகொண்டு அங்கிருந்த மரத்தில் ஏறி ஒளிந்துகொண்டான். இரவு பத்துமணி வரை யாருமே திரும்பவில்லை. பிறகுதான் முடின் குதிரை வேகமாக வந்தது. அடுத்து அந்தப் பெண்கள் திரும்பி வந்தனர். கடைசியில் சோணிசந்த் வந்தான். அஜிஸ் அவனைத் தொடர்ந்தான். அவன் நேராக அமீன் சந்தின் மாளிகைக்குச் சென்றான். அஜிஸ் அவனுக்குத் தெரியாமல் அவனைத் தொடர்ந்து வந்தான்.

வெளிவாயிலில் இருட்டு சூழ்ந்திருந்ததால் அஜிஸ் நுழைவதற்கு எளிதாக இருந்தது. மெதுவாக உள்ளே நுழைந்து ஒரு கதவிடுக்கில் மறைந்துகொண்டான். அப்பொழுதுதான் முன்னரே திரும்பிவந்த பெண்கள் உள்ளே நுழைந்தனர். நளினி பக்கத்திலிருந்த அறையில் நுழைந்ததும் அஜிஸ் ஊர்மிளாவைப் பின்பற்றி அவள் சென்ற அறைக்குள் நுழைந்துவிட்டான். நல்ல வேளை அவள் திரும்பவே இல்லை!

கூடத்தில் வைத்தியர் வரப்பிரசாதருடன் அமீன் சந்த் பேசிய வார்த்தைகள் தெளிவாகவே அவன் காதுகளில் விழுந்தன. அவனால் அந்தச் சதித் திட்டத்தைக் கேட்கவும் சகிக்கவில்லை! உடனேயே பாய்ந்து கத்தியால் குத்திக் கொன்றுவிடலாமா என்று ஆத்திரப்பட்டான. சமயம் சரியில்லையென்று தன்னைத் தானே சமாதானப் படுத்திக் கொண்டான். இந்த நேரத்தில் ஊர்மிளா இருட்டிலேயே தன்னுடைகளைக் களைந்துவிட்டு இரவு உடை உடுத்திக் கொண்டே ஒரு மெழுகு வர்த்தியைக் கொளுத்தினாள். அஜிஸின் நிலைமை மிகப் பயங்கரமாகிவிட்டது. அவன் ஒரு கதவோரத்தில் நின்றுகொண்டிருந்தான். அந்த இடமோ அவன் உடல் முழுவதையும் மறைக்க முடியாத அளவு சிறிதாகவே இருந்தது.

எதற்கும் தயாராக இருப்போம் என்று தனது பிச்சுவாவை உருவிக் கையில் பிடித்துக்கொண்டு நின்றுகொண்டிருந்தான். அந்தக் கதவிடுக்கருகே ஒரு மேஜையிருந்தது. அதில் ஒரு பூந் தொட்டியும் நீர்ப்பானையும் இருந்தன. தண்ணீர் முகந்தருந்த வந்த ஊர்மிளா அங்கே அஜிஸைப் பார்த்துவிட்டாள். அப்படியே திகைத்துவிட்டாள். அரைகுறையாக உடுத்திக்கொண்டிருந்த ஆடையைச் சட்டென்று இழுத்து மூடிக் கொண்டே கூவ எத்தனித்தாள்.

“ஒரு துளி சத்தம் வெளியில் கிளம்பினால் ஆயிரந் துளி இரத்தம் குடித்துவிடும் இந்தப் பிச்சுவா”

‘நீ யார்?......’’ நெஞ்சுக்குழி விம்மிப் புடைக்க அவள் பயத்



தோடு போராடிக் கொண்டே அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தாள்.

"நீ எதையும் என்னிடமிருந்து தெரிந்துகொள்ளமுடியாது. ஆனால் உன்னைப்பற்றி நான் தெரிந்துகொள்ள வேண்டும். கேட்கும் கேள்விகளுக்குப் பதில் உடனுக்குடன் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால் பிச்சுவா உன் இதயத்தில் விளையாடும்!"

"சரி, சொல்கிறேன்........." என்று மிரண்ட பார்வையோடு குளறினாள்!

"நீ யார்?"

"நான் அமீன்சந்தின் ஒரே மகள் ஷர்மிளா"

"மூமன்கானுக்கும் உனக்கும் என்ன தொடர்பு?"

"அவர் எனது ஆசைக் காதலர்"

"உன்னுடன் வந்த பெண் யார்?"

"அவள் நளினி. சுபேதார் அலிவர்திகானின் அந்தரங்கப் பணிப் பெண்"

"மூமன் உன்னிடம் என்ன சொல்ல இன்று அழைத்தார்?"

"அவர் என்னை அழைக்கவில்லை. நான்தான் அவரை அழைத்தேன். அவர் வந்தார். இன்று டில்லி செல்வதாக மட்டும் சொன்னார்"

"சரி, உன் படுக்கைக்குப் போய் அசையாமல் உட்கார்.

நான் இந்த இடத்திலிருந்து வெளியேறுகிற வரை கூவினால் உன்னைக் கொன்றுவிடுவேன்'' என்று எச்சரித்துவிட்டுச் சுற்றுமுற்றும் பார்த்தான். ஒரு திறந்த சாளரம் தெரிந்தது. அதன் வழியாகப் பார்த்தான். வெளிமதிலையடைந்துவிடலாம் என்று தெரிந்தது. அதன் மீது ஏறினான்.

"திருடன், திருடன்........." என்று கூவினாள் ஊர்மிளா. அமீன்சந்த் வந்தும் ஆள் யாரென்று மட்டும் கண்டு கொள்ள முடியவில்லை!

அஜிஸ் இந்தச் செய்தியை முடேனிடம் தெரிவிக்கவேண்டும் என்ற அவாவுடன் வெகுவேகமாகச் சென்றான். முடீனைக் காண முடியவில்லை. பிறகு ஸுராஜுவின் மாளிகையை நாடிச் சென்றான். அவனும் கிடைக்கவில்லை. இந்தச் சங்கடமான நிலைமையில் என்ன செய்வதென்று புரியவில்லை. கடைசியில் தானே அந்தப்புரம் சென்று நஞ்சு கலந்த பாலோ, பானமோ இருந்தால் ஊற்றிவிடுவது என்று முடிவு செய்துகொண்டு கிளம்பினான்.

அந்தப்புரத்தில் எங்கும் நிசப்தம். மெதுவாக அலிவர்திகானின் பள்ளியறையினுள் நுழைந்தான். அவன் நெஞ்சு "திக், திக்......"என்று அடித்துக்கொண்டது. அவன் கண்ட காட்சியும் விகாரமாகத் தோன்றியது. அலிவர்திகானும், பணிப் பெண் நளினியும் கட்டித் தழுவியபடியே உறங்கிக் கொண்டிருந்தார்கள்.

பால் கிண்ணங்களை மெதுவாக எடுத்தான். ஒன்றில் மட்டும் நஞ்சுவாடை வீசிற்று. ஐயோ......அது கை தவறிக் கீழே விழுந்துவிட்டது! நளினி விழித்துக்கொண்டாள். எதிரில் அந்த வீரனைக் கண்டதும் அவளுக்கு ஒன்றும் புரியவில்லை. மிரள், மிரள விழித்தாள்.

"அடி நயவஞ்சகி, நஞ்சு கொடுத்துவிட்டாயே!'' என்றான் அழுத்தந் திருத்தமாக!

"இந்நேரத்தில் இங்கு வர நீ யார்?'' என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

"நான் ஒரு உண்மை ஊழியனடி, பசப்புக்காரி'' அஜிஸ் ஆத்திரமாகப் பேசினான்.

நளினி எழுந்து வந்தாள். "நீ இங்கு வந்ததே தவறு என்பதை யுணராமல் நின்றுகொண்டிருக்கிறாய். ஓடிவிடுவதே நல்லது'' என்று உபதேசம் செய்தாள். அவன் நகரக்கூட இல்லை. "உனது நஞ்சு வேலை செய்துவிட்டதா, சுபேதார் இறந்துவிட்டாரா?'' என்று கேட்டான் "நாளைக் காலையிலே வந்து சொல்லு'' என்று ஒய்யாரம் பேசினாள். அவளுக்கு உள்ளுக்குள் பயமாக இருந்தது. மேலும் யாருக்கும் தெரியாது என்று எண்ணிக்கொண்டிருந்தது பொய்யாகிவிட்டதே என்ற அதிர்ச்சி வேறு உண்டு. இருந்தாலும் அவனை அனுப்பிவிட முயன்றாள். அவன கரங்களைப்பற்றியிழுத்துக்கொண்டு போனாள்.

"நீ நினைப்பது தவறு. சுபேதார் தூங்குகிறார். நான் நினைத்தால் உன்னைத் தூக்கில் தொங்கவைத்துவிட முடியும்''

"அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை''

அவன் அடம்செய்தான், நளினியால் அதற்குமேலும் சமா

ளிக்க முடியவில்லை. உடனே யோசனை செய்தாள்.

"ஐயோ, அக்கிரமம், என்னை இப்படிவதைக்கிருனே" என்று கூவினுள், அவன் கரங்களைத் தான்பற்றிக்கொண்டே. அஜிஸ் திடுக்கிட்டுக் அவளோ உதறினுன். ஆனல் கைகளை அவன் தோள்களைத் தழுவிக்கொண்டு கூவினுள். சுபேதார் விழித்துக் கொண்டான்!

"என்ன அது...?"

"அர்த்த ராத்திரியில் அந்தப்புரத்தில் வந்து என்னைப் பெண்டாள இழுக்கிருன். தூக்கத்தில் உங்களை எழுப்பக் கூடாது என்று இவ்வளவு நேரம் கடத்திவிட்டேன்"

"அஜிஸ், நன்றிகெட்ட நாயே! நீ ஏன் வந்தாய்?"

"இந்தப் பாதகி பாலிலே நஞ்சுகலந்துவிட்டாள்!"

"என்னடா கழுதை, கதைக்கிருய்? பாலிலே நஞ்சு கலந்ததைப் பாதி இரவில் படுக்கையறையில் பணிப் பெண்ணைத் தழுவிக்கொண்டு சொல்ல வந்தாயா?"

"உண்மை இதுதான் சர்க்கார்"

"டப், டப்.. ..."

கைகளைத் தட்டினுன் சுபேதார். சிப்பாய்கள் இருவர் வந்தனர்.

"இந்த நாயைச் சிறையில் தள்ளுங்கள்"

நளினி சுபேதாரிடம் சென்ருள். அவன் அவளை அன்போடு அணைத்துக் கொண்டான். பயந்து நடுங்கியவள் போல அவனது பரந்த மார்பில் தனது முகத்தைப்புதைத்துக் கொண்டு விம்மி விம்மி யழுதாள். நீலிக் கண்ணீர் வடித்தாள் அந்த நீசத் தொழில்காரி! சுபேதார் ஆதரவுடன் அவளது தலையைத் தடவிக்கொடுத்தான்.

பதினோந்தாம் அத்தியாயம்

இரகசியப் பிரயாணம்

நல்ல கும்மிருட்டு. எங்கும் அமைதி. இரண்டு குதிரைகள் மட்டும் வெகு வேகமாக முன்னேறிக்கொண்டிருந்தன.

"ஸுராஜ், நாம் டில்லி போய்த் திரும்புவதற்குள் தாயகத்தில் என்னென்ன விளைவுகள் நேருமோ?"

"ஏன் மூடன், இப்படிக் கோழைபோல மனங் கலங்குகிருய்?"

"ஆமாம், என்மனம் அப்படிச் சொல்கிறது!"

"ஏன்?"

"எனக்கு இந்த அமீன்சந்தின் மீது கொஞ்சமும் நம்பிக்கையில்லை"

"அவன் ஒரு அன்னக்காவடி. அவனல் என்ன செய்ய முடியும்.'"

"அன்னக் காவடியா?"

"பணத்தில் சொல்லவில்லை மூடன், போர்முறையில் அவன் ஒரு பிச்சைக்காரன். அவனுக்கு வாள் பிடிக்கத் தெரியுமா?"

"நீ வானை நம்பியே மோசம் போகப் போகிருய்"

வழிநெடுகிலும் இப்படிப் பல விதமான செய்திகளைப் பேசிக் கொண்டே சென்றனர். சில சமயங்களில் அவர்களது உரையாடல்களில் முக்கியப் பிரச்சினை வங்கத்தின் அரசாங்க வேலைகளாக இருக்கும். பல சமயங்களில் உள்ளமுருக் கிடும், ஷர்மிளாபோன்ற அழகிகளின் அந்தப்புர இரகசியங்களாக அமையும். கொஞ்ச நேரம் டில்லியைப்பற்றிப் பேசுவார்கள். பிறகு திரும்பிவந்து செய்ய வேண்டிய எதிர்காலத் திட்டங்களைப் பற்றிப் பெரிய ஆராய்ச்சி செய்வார்கள். பெரிய இலட்சியவாதிகள் போல நாளை சுபேதாராகிவிட்டால் செய்யவேண்டிய செயல்களைப் பற்றிப் பரிசீலனை செய்வார்கள். முடின் அடிக்கடி திருத்தப்பிரேரபணை கொண்டு செல்வான். அவன் திருத்தங்கள் மறுக்கப்படுவதில்லை. சில சமயங்களில் இணைப்புத் திட்டங்கள் சொல்வான். அவைகளை முழுக்க முழுக்க ஆதரிப்பான் எதிர்கால சுபேதார்.

இவர்களின் பேச்சுக்கிடையே பின்னால் வருங் குதிரையோசை எப்படிக் கேட்க முடியும்? சோணிசந்த் தனது தலைவனின் ஆணைப்படி அவர்களைப் பின் தொடர்ந்துவந்தான். அவர்களின் நடவடிக்கைகளை அணுவுக்கு அணு ஆராய்ச்சி செய்யவேண்டும் என்ற ஆசையிருந்தாலும் எப்படி அவர்களின் உரையாடலைக் கேட்க முடியும்? அவர்களோ குதிரைகளில் வேகமாகச் சவாரி செய்துகொண்டிருந்தனர். அவர்களின் திட்டம் என்னவென்று அறிந்துகொள்ள எந்த முறையைக் கையாளுவது என்று புரியவில்லை. அதைப்பற்றியே சிந்தித்துக் கொண்டு தானும் பின் தொடர்ந்து கொண்டிருந்தான்.

அவன் ஒரு வியாபாரிபோல மாறு வேடந் தரித்திருந்தாலும் எந்த முறையில் அவர்களோடு நட்பு கொள்வது என்று அவனால் புரிந்துகொள்ளமுடியவில்லை.

இந்த நேரத்தில் அமீன் சந்தின் வியாபாரத்தின் போக்கை உண்மையாக விளங்கிக்கொள்ள வேண்டும். அவன் பெரிய திருட்டு வியாபாரத் தலைவன். ஆனால் அவனைப் பார்த்தால் யாரும் அப்படிச் சொல்ல முடியாது! யார்தான் அவனைச் சந்தேகிக்க முடியும்! ஆகவே அவனுக்கு அடங்கிய வியாபாரக்கூட்டம் ஒவ்வொரு கோயில்களிலும், சத்திரங்களிலும், சாவடிகளிலும பண்டாரங்கள் போலவும், பக்கிரிகள் போலவும்மறைந்திருப்பார்கள். பகல் முழுவதும் எவரும் எள்ளளவும் சந்தேகிக்க முடியாத அளவு தங்கள் வேடத்திற்கேற்ப நடிப்பார்கள். இரவானதும் கிடைக்கும் பண்டங்களை உடனுக்குடன் கல்கத்தாவிற்கு அனுப்பிக்கொண்டிருப்பார்கள். அரசாங்கம் என்ன தடையுத்தரவுபோட்டுத் தடை செய்திருந்தாலும் அந்தப் பொருள்கள் கப்பல்களில் ஏறி விடும். அதற்கு ஈடாகக் கோடி கோடியாகப் பொருள்களை

வாங்கிவிடுவர்! அது மட்டுமா, திருடித் திருடிப் பொருள்களைச் சேர்த்துத் தாய்நாட்டு மக்களை இல்லாமையால் வாடவிட்டு அந்நியரிடம் பணத்திற்காக அடிமை வியாபாரம் செய்தனர்!

ஆகவே அமீன்சந்தின் ஆட்கள் எங்கும் இருப்பர். அவனது ஆணை எங்கும் வேலை செய்யும். எந்த நேரத்திலும் அவனால் எதையும் செய்யமுடியும். நினைத்தால் ஒரு பெரிய புரட்சியைக்கூட நடத்த முடியும். ஆனால் அதனை அமீன்சந்த் விரும்பவே இல்லை. அதில் வெற்றி கிடைக்கும் என்று நம்ப முடியவில்லை. ஆகவே சூழ்ச்சியைக் கையாண்டான்.

அவர்களுக்குள் குழூஉக்குறியும், அடையாள பில்லைகளும் உண்டு. வணக்க முறைகளிலும் மாற்றங்கள் உண்டு. அவர்கள் ஒருவரை யொருவர் சந்திக்கும் பொழுது "ஜே ராம் சந்த்" என்பார்கள். உடனே எதிரில் வருபவர் விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்கள் அணிந்திருக்கும் ஆடைகளின் உட்புறத்தில் சிவப்புத் துணியால் நரியுருவம் அமைக்கப்பட்டிருக்கும்! "தந்திரத்திற்கு ஜே! நரிவாழ்க" என்று பொறிக்கப்பட்டிருக்கும். அவர்கள் தலையை மட்டும் குனிவார்கள். வணக்கமுறை அதுதான்!

சோணிசந்த் அடுத்த சாவடியில் எப்படியும் அவர்களுடன் நண்பனாகிவிடவேண்டும்என்று திட்டமிட்டான். ஆனால் சந்தர்ப்பம் இன்னும் சற்று முந்திக்கொண்டது. இப்படிச் சிந்தனை உலகில் சஞ்சரித்ததால் கடிவாளங்களைச் சரிவரச் செலுத்தத் தவறிவிடவே, குதிரையின் வேகத்தில் தலைகீழாக விழுந்துவிட்டான.

"ஐயோ, காப்பாற்றுபவர் யாருமில்லையா?" என்று கதறினான்.

இந்தக் குரல் மிக மெல்லியதாக முன்னே சென்றுகொண்டிருந்த வீரர்களின் செவிகளில் பட்டது. அவர்கள் தங்கள் குதிரைகளை நிறுத்தி உற்றுக் கேட்டனர். யாரோ பரிதாபமாக கதறுவது நன்றாகக் கேட்டது. ஆகவே குதிரைகளை வந்த பாதையிலேயே விட்டனர். கொஞ்ச தூரத்தில் ஒருவன் கீழே விழுந்துகிடந்தான். அவனது குதிரையும் அவன் அருகே நின்றுகொண்டிருந்தது. இருவரும் கீழே இறங்கி அவனைத் தூக்கிவிட்டனர். அவனுக்கு ஒன்றும் காயம் ஏற்படவில்லை. அதிர்ச்சி இருக்கலாம். அருகிலிருந்த குளத்திலிருந்துகொஞ்சம் நீர்கொடுத்தவுடன் அவனது நிலை நலப்பட்டது. அவனாகவே தன் குதிரையில் ஏறிக்கொண்டான். பிறகு மூவரும் சேர்ந்தே பயணம் சென்றனர்.

"நீர் எந்த ஊர்?"

"என்னிருப்பிடம் ஹூக்ளி"

"எங்கே போகிறீர்?"

"டில்லிக்கு"

"அங்கு என்ன வேலை?"

"வியாபார சம்பந்தமாய்..."

பிறகு ஒன்றும் பேசாமலே சென்றனர். அருகிலிருந்த ஒரு சாவடியை அடைந்தனர்.

இருளும் ஓட்டம் ஓட்டமாய் ஓடிமறைந்தது. கதிரவன் தனது வெள்ளிப்பற்கள் வெளியில் தெரியுமாறு சிரித்தான்! அவன் சிரிப்பில் அந்தச் சாவடியும், அதன் சுற்றுப்புறமும் மிக அழகாக இருந்தன!

[தொடரும்]

சிலப்பதிகாரக் காட்சிகள்

விசு. திருநாவுக்கரசு

7. மதுரையை நோக்கி மூவர்

ஆழ்ந்த உறக்கத்திலிருந்து உலகம் கண் விழிக்கின்ற புலர்பொழுது. நீல வானத்தில் மின்னிய நக்ஷத்திரங்களும் குளிர்ந்த கிரணங்களால் இனிமையாய்த் துயிலவைத்த வெண்மதியும் இருந்தவிடம் தெரியாமல் மறைந்துபோயின.

அந்நேரத்தே ஊழ்வினை காட்டிய நெறியிலே மதுரை நோக்கிக் கோவலனும் கண்ணகியும் வழிநடந்தனர். பூம்புகார் நகரத்து வழியிடையேயுள்ள திருமாலையும், புத்தனையும், அருகனையும் வழிபட்டு நகர்வாயிலைக் கடந்தனர். புகார் நோக்கிப் புகுவாரை வரவேற்றுச் சோர்வகற்ற இயற்கை அன்னை வழங்கியதுபோலும் சோலையொன்று உண்டு. இச்சோலையிலிருந்து அரசாளும் மன்மதன் சோழனுக்குத் திறைப் பொருளாக இளவேனிலையும் இனிய தென்றலையும வழங்கி வருகிறான். இத்தகைய சோலையைவிட்டு நீங்கிய கோவலனும் கண்ணகியும் கொழுமபுனல் காவிரியின் விழுமிய வடகரையை அடைந்தனர்.

காவிரி அன்னையின் கரை அருகே உள்ள சோலை, அதன் இனிய வளர்ப்பால் மதர்த்து அடர்ந்து விளங்கியது. கனி குலுங்கும் கிளைகள் நிலம் நோக்கிப் படர்ந்த காரணத்தால் கோவலனும் கண்ணகியும் நுழைந்து உள்ளே புகுந்தனர். கவுந்தியடிகளின் தவப்பள்ளியை அடைந்தனர். இவ்வாறு ஒரு காத தூரம் கடந்து வந்த கண்ணகியின் கொடியிடையும் பூவடியும் வருந்தின. விற்புருவங்கள் வியர்த்தன. அவள் வாழ்விலே இது புதுமை என்பதை வாய்விட்ட சிறு மூச்சுக் காட்டியது. சிறு தூரம் வந்த அளவிலே நெடுந்தூரம் வந்ததாய்க் கண்ணகி எண்ணினாள்.

குடதிசைக் கொண்டு
கொழும்புனல் காவிரி
வடபெருங் கோட்டு
மலர்ப்பொழில் நுழைந்து
காவதங் கடந்து
கவுந்திப் பள்ளிப்
பூமரப் பொதும்பர்ப்
பொருந்தி ஆங்கண்
இறுங்கொடி நுசுப்போடு
இணைந்தடி வருந்தி
நறும்பல் கூந்தல்
குறும்பல உயிர்த்து

முதிராக் கிளவியின்
முள்ளெயிறு இலங்க
மதுரை மூதூர்
யாதென வினவ

கண்ணகியைக் கூறி வருகின்ற தொடர்களிலே, அடைமொழிகளிலே, அவளது இளமை, அது பயக்கும் இனிமை இவை கலந்த பெண்மை மறவாது காட்டப்பட்டு வருகிறது. இங்கே மழலை மாறாத சொற்களால் கண்ணகி மதுரை மூதூர் இன்னும் எவ்வளவு தூரம் என்று கோவலனை நோக்கிக் கேட்கிறாள். 'முதிராக் கிளவியும்', (முதிர்ச்சி அடையாத சொற்கள்) 'முள்ளெயிறும்' (முள்முனைபோன்ற சிறிய பற்கள்) கண்ணகியின் இளமையைப் புலப்படுத்தப் போதுமானவை. சொல்லில் இளமை, உறுப்பில் இளமை, இவை இரண்டாலும் நிறை இளமை என்பதைத் தெற்றென அடைமொழிகள் காட்டுகின்றன.



கண்ணகியின் கேள்விக்குக் கோவலன் கூறிய விடையோ அற்புதமான உருவம் பெறுகிறது. அதுவே மனோதத்துவத்திற்கு மாறாகாமலும் அமைந்து விடுகிறது. 'ஆறைங் காதம் நம் அக'நாட்டும்பர் நாறைங்கூந்தல் நணித்தென நக்கு'—இதுவே அவன் பேசிய மறுமொழி. 'நமது நாட்டிற்கு ஐந்தாறு காத தூரத்தில் மதுரை உள்ளது; சமீபந்தான்' என்று சிரித்துக்கொண்டு கூறுகிறான். அவன் விடையில் சொற்செட்டும், அதே சொற்கள் சிந்திக்கத் தூண்டும்பொழுது பொருள் விரிவும் செய்கின்றன.

ஒரு காத தூரம் கடந்த நிலையிலேயே களைப்படைந்து போன கண்ணகியிடம், மதுரை இன்னும் முப்பது காத தூரமிருக்கிறது என்று கூறினால் அதன் விளைவு யாதாகும்? துன்பத்தில் இதுவரையும் உழன்ற கண்ணகிக்கு மேலும் துன்பம் செய்ததாகுமல்லவா!

கணவனை அடையாத துன்பத்தினும் அடைந்த துன்பம் பெரிதாகிவிடும். செயலில் தான் துன்பமென்றால் சொல்லிலாவது இன்பம் வேண்டாமா? 'முப்பது காத தூரம்' என்று கோவலன் தன் வாயால் கூறவில்லை. கண்ணகியின் அறிவின் விரிவுக்கு ஏற்பப்பொருள் கொள்ள வைக்கிறான். அதற்கான திறம் கோவலன் வாக்கிலே நிரம்பிக் கிடக்கிறது. ஐந்தாறு முப்பது என்ற பொருளும், ஐந்தும் ஆறும் பதி

ஞென்று என்ற பொருளும் கொள்ளத் தக்கனவாயினும் இங்கே ஐந்து அல்லது ஆறு காத தூரத்தில் மதுரையுள்ளது என்று அவள் அஞ்சி ஏங்காமல் அமைதியாய் ஆறுதலாய்க் கூறுகிருன். கண்ணகியின் மனேநிலைக்கு இவ்விடை பொருந்துகிறது. ஊரை விட்டு ஒரு காத தூரம வந்தவுடனேயே மதுரை வந்துவிடப் போவதாய் நினைத்த கண்ணகியின் பேதமையை நினைத்தால் அவனுக்கு உள்ளூறச் சிரிப்பும் வருகிறது. அவன் மெய்யும் பேசுகிருன். அவள் அஞ்சி விடாமல் பொய்யும் சொல்லுகிருன். இந்த இருவரிடையே இளங்கோ கோவலனுகியும், கண்ணகியாயும் மாறி மாறி வடிவமெடுத்து வியக்க வைக்கிருர்.

இத்தகைய கண்ணகியும கோவலனும் பொழிலிடையேயுள்ள தவப் பள்ளியிலே கவுந்தி அடிகளேக் காணுகிருர்கள். கண்டு திருவடி வணங்குகிருர்கள். 'நீங்கள் இவ்வாறு வரக் காரணம் என்ன' என்று கவுந்தி அடிகள் கேட்டபோது இவவினுவிற்கு விடைசொல்ல விரும்பாத கோவலன் மதுரை போய்ப் பொருள் திரட்டும் தன் நோக்கத்தைக் கூறுகிருன். இவர்கள் செல்வதில் வருத்தமில்லையாயினும பாடகமமைந்த கண்ணகியின் மலரடிகள் பருக்கைக் கற்களிலேபட்டு வருந்துமே என அடிகள் வருந்துகிருர். தாமும் மதுரைக்கு வருவதாய்க்கூறிய சொற்களிலே கோவலன் கண்ணகியின துன்பமீனத்தும் துடைக்கப் பட்டதாய் எண்ணிஞன்.

மதுரைநோக்கி மூவரும் புறப்பட்டனர். செல்லும் வழியில் நிகழும் துன்பங்களே அடிகள் இருவருக்கும் எடுத்துக் கூறுகிருர். இங்ஙனம கூறுமுகமாகச் சோழநாட்டின் நீர்வளமும நிலவளமும கூறப்பட்டு விடுகின்றன. ஒரு செயலில் இரு பயனும் விளேயுமாறு இப பகுதி உருவாகிறது. இனி இதைக் கவுந்தி அடிகளின் வாக்கிலே காண்போம்.

கண்ணகியின் மெல்லிய உடலோ வெயிலின் கொடுமையைப் பொருது. சோலே வழியேதான் நாம் செல்ல வேண்டும. அங்கங்கே வள்ளிக் கிழங்குகளேப் பெயர்த்த பள்ளங்களிலே வாடிய சணபகப் பூக்கள் நிரம்பிக் கிடக்கும். கவனமாக நாம் செல்லத் தவறிஞல் பொய்க்குழியிலே நாம் விழுந்துவிட நேரும்.

வெயில்நிறம் பொருஅ
மெல்லியல் கொண்டு
பயில்பூந் தண்தலேப்
படர்குவம் எனினே
மண்பக வீழ்ந்த
கிழங்ககழ் குழியைச்
சண்பகம் நிறைத்த
தாதுசேர் பொங்கர்
பொய்யறைப் படுத்துப்
போற்ரு மாக்கட்குக்
கையறு துன்பம்
காட்டினும் காட்டும்.

இத்துன்பத்தை நினைத்துப் பள்ளங்களேவிட்டு ஒதுங்கிப் பலாமர நிழல் வழியே சென்ருல் சுமை தாங்காது தாழ்ந்த கிளேகளிலே தொங்கும் பலாப் பழங்கள் நம்மைப் பகையாக நினைத்துத் தலையிலே முட்டும்.

'தலைகுனிந்துபோ' எனக் கட்டளை யிட்டு அறிவுறுத்தும்.

உதிர்பூஞ் செம்மலின்
ஒதுங்கினர் கழிவோர்
முதிர்தேம் பழம்பகை
முட்டினும் முட்டும்.

இந்தப் பலாப்பழத்திற்கு அஞ்சி விலகினால் இதன் இனமான பலா விதைகளுக்கு அஞ்சி ஒதுங்கநேரும். பாத்தி பாத்தியாய் விதைக்கப்பட்டுள்ள மஞ்சளும் பரவிக்கிடக்கின்ற பலாவிதைகளும் காலையுறுத்தி வருத்தும். வயல் வழியே செல்லலாம் என்றாலோ பூமணக்கின்ற பொய்கைகளிலே நீர்நாய்கௌவிய வாளை மீன்கள் துள்ளிக் குறுக்கே பாய்வதைக் கண்டு கண்ணகி அஞ்சுவாள்.

வயலுழைப் படர்குவம்
எனினே ஆங்குப்
பூநாறு இலஞ்சிப்
பொருகயல் ஓட்டி
நீர்நாய் கௌவிய
நெடும்புற வாளை
மலங்குமிளிர் செறுவின்
விலங்கப் பாயின்
கலங்கலும் உண்டுஇக்
காரிகை.

எனவே கரும்பு பயிர்செய்த தோட்டத்தே நாம்போகலாம். ஆனால் கரும்பிலே கட்டிய தேன் கூடுகள் சிதைந்ததால் கசிந்துவரும் தேன்துளிகள் கலந்த நீரைக் கண்ணகி அடங்காத நீர்வேட்கையால் அறிவு சோர்ந்து குடங்கையால் மொண்டு உண்ணவுங்கூடும். கள்ளைப்போல் நீக்கவேண்டிய ஒன்று தேன்என்று கூறுகிறார்

கரும்பில் தொடுத்த
பெருந்தேன் சிதைந்து
சுரும்புசூழ் பொய்கைத்
தூநீர் கலக்கும்
அடங்கா வேட்கையின்
அறிவஞர் எய்திக்
குடங்கையான் மொண்டு
கொள்ளவுங் கூடும்.

அதிக வேட்கையிலே அறிவு தன் இயல்பை இழந்துவிடுகிறது. இது நல்லது, இது தீயது என்பதை உணரும் ஆற்றலை இழக்கின்றநிலை மிதமிஞ்சிய வேட்கையிலே பிறக்கிறது. இதை 'அடங்கா வேட்கையின் அறிவு அஞர் எய்தி' என்பதில் அழுத்தமாய்ப் பேசவைக்கிறார் ஆசிரியர்.

வயல் வழியே போக முடியவில்லை. வரப்பு வழியே போகலாமென்றாலோ களை எடுப்பார் பறித்த குவளை மலர்கள் வரப்பிலே கிடந்து தாம் இறக்கும் நிலையிலும் தம்மிடம் இரக்கும் வண்டுக்குத் தேன் நல்கும். அவ்வண்டுகள் நம்



நண்பர்: இந்தாங்க, நம்ம நட்புக்கு அறிகுறியா, இதை வச்சுக்கங்க.

காலிலேபட்டு அழிந்துவிடும். இது பெரும்பாவம். வயல் வழியும், வரப்பு வழியும் இங்ஙன மானால் வாய்க்கால் வழியே போகலாம். ஆனால் அதன் கரையிலே உயிர் வாழும் நண்டும் நத்தையும் நம காலிலே பட்டு அழிந்துவிடும்.

குறுநர் இட்ட
குவளையும் போதொடு
பொறிவரி வண்டினம்
பொருந்திய கிடக்கை
நெறிசெல் வருத்தத்து
நீரஞர் எய்தி
அறியாது அடிஆங்கு
இடுதலும் கூடும்
எறிநீர் அடைகரை
இயக்கந் தன்னில்
பொறிமாண் அலவனும்
நந்தும் போற்றாது
ஊழடி ஒதுக்கத்து
உறுநோய் காணில்
தாழ்தரு துன்பம்
தாங்கவும் ஒண்ணா

எனவே எவ்வழியில் போவதாயினும் எந்த உயிருக்கும் ஏதம் இல்லாமலும் நமக்குத் துன்பமின்றியும் செல்ல வேண்டும். நீ உன் மனைவிக்கு அந்த அந்த இடங்களில் குறிப்பாக உணர்ந்து கூறத் தக்கன கூறிப் பாதுகாத்து வருவாயாக எனக் கவுந்தி அடிகள் கூற அவரது இனிய பேச்சிலும் அதை நேருக்கு நேராய்க் காட்டிவரும் காட்சிகளிலும் கண்ணகியும் கோவலனும் சோர்வு நீங்கித் துன்பம் மறந்தனர். அன்றியும் ஆற்றங்கரையிலே, வயல் வெளியிலே உழவர்கள் உவந்துபாடும் ஏர் மங்கலப் பாட்டையும் முகவைப் பாட்டையும் கேட்டு வழிநடை வருத்தம் மறந்தனர்.

இவ்வாறு நாளொன்றுக்குக் காதவழி நடந்து திருவரங்கம் (ஸ்ரீரங்கம்) வந்து சேர்ந்தனர். சோலையொன்றிலே தங்கிச் சாரணரது உபதேசம் பெற்றனர். பின்னர் அமைதியாய் ஓய்வு மேற்கொண்ட சமயத்தில் அங்கே வம்பனொருவனும பரத்தை யொருத்தியும் வந்தனர். கோவலனையும் அவன் அருகேயுள்ள கண்ணகியையும் கண்டு சற்றுவிலகிக் கவுந்தி அடிகள் இருக்கப் பார்த்தனர். 'காமனைப் போலவும் அவன் தேவி ரதியைப் போலவும் இங்கு இருக்கின்ற இவர்கள் யார்?' என்பதை அறிந்து கொள்ள விரும்பிக் கவுந்தி அடிகளை நோக்கி 'உங்களோடு வழி நடைவந்த இவர்கள் யார்?' என்று கேட்டனர். அதுகேட்ட கவுந்தி அடிகள் 'என்மக்கள் நீங்கள் நினைப்பது போலக் காமனுமல்ல ரதியுமல்ல' என்று கூறுகிறார். அல்லாமலும் 'வழி நடந்த வருத்தத்தால் சோர்ந்துள்ளனர். அவர் பக்கம் செல்லாதீர்' என்று பணித்தார்.

அடிகள் கூறிய விடை அவனுக்கு மேலும் ஐயத்தை உண்டாக்கி விட்டது. அருகே கணவனைப் போலவும் மனைவியைப் போலவும் அமர்ந்திருக்கப் பார்த்தால் அவனுக்கு ஐயம் வராமற் போகுமா?

'ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் கணவனும் மனைவியுமாய் வாழ்வதுமுண்டோ! என்றொரு கேள்வியை எதிர்பாராத விதமாய் போடுகிறான்.


அவன் இவ்வாறு கேட்பதற்குக் காரண முண்டு. 'என் மக்கள்' என்று கூறும் கவுந்தி அடிகளோ இல்லறத்தை வெறுத்த துறவி. 'அத்தகைய

ஒருவருக்கு மக்களுமுண்டோ' என்பது ஒன்று. 'ஒருதாய் வயிற்று மக்கள் இருவர், மண மக்களாதலு முண்டோ' என்பது பிறிதொன்று. இந்த இரண்டாலும் அவர்கள் இருவரும் அண்ணனும் தங்கையுமல்ல—அடிகளின் மக்களுமல்ல என்ற முடிவுக்கு வருகிறான். கவுந்தி அடிகளைத் 'தவத்திர்' எனறும், 'கற்றறிந்திர்' என்றும் கூறுகிறான். அந்தச் சொற்களில்தான் எத்தனை அழுத்தமாய் இகழ்ச்சிப் பொருள் தொனிக்கிறது!

தவத்திற்கு மாறான இல்லறத்து இருவர் கூட்டுறவைத் 'தவத்திர் உடன் ஆற்றுவழிப் பட்டோர் யார்' என்ற தொடரில் கூறுகிறான். கற்றவர், அதை அறிந்தவர்—அத்தகைய ஒருவர் 'என்மக்கள்' என்று கூறியது எத்துணைப் பொய்யானது என்பதைச் சொல்லி நகையாடுகிறான். 'நீர் கற்ற நூல்களில் ஒருதாய் வயிற்றுப் பிள்ளைகள் கணவனாய், மனைவியாய் வாழ்ந்ததுண்டோ' என்று கேட்கிறான். இத்தகைய ஒருவனை இடையிலே புகுத்திப் பேசவைத்து அவனுக்கு 'வம்பன்' என்றொரு பெயரையும் வழங்கிய இளங்கோவின் நாடகப் பண்பு மேலானது.

இந்தக் கேள்விகள் ஒன்றும் கவுந்தி அடிகளின் காதிலே பட்டதாயில்லை. கடுஞ்சினம் கொண்ட அவர் 'பிடிசாபம்' என்றார். அதே சமயத்தில்:

நறுமலர்க் கோதையும்
நம்பியும் நடுங்கி
நெறியின் நீங்கியோர்
நீரல கூறினும்



நீதிபதி: எம்ப்பா நீ இதுக்குமுன்பு ஜெயிலுக்குப் போயிருக்கிறாயா?

கைதி: ஆமாங்க

நீதிபதி: எப்பொழுது?

கைதி: போன பொங்கலுக்கு வெள்ளையடிக்கப் போனேனுங்க

அறியாமை என்று
அறிதல் வேண்டும்

எனக் கண்ணகியும் கோவலனும் அந்த வமபனும் பரத்தையும் நரியாய் ஊளையிடுவது கேட்டுநடுங்கிக் கவுந்திஅடிகளை நெருங்கி நல்லொழுக்க நெறியில் நீங்கியவர்கள் நீர்மை அல்லாததைக் கூறினாலும் அது அறியாமையால் கூறியது என நினைத்து மன்னிக்கவேண்டும் என்று கூறினர். கவுந்தி அடிகள் ஓராண்டுக்குப் பிறகு அவர் உண்மை உருவம் பெறுவர் என்று சாபவிடை செய்கிறார்.

இவ்வாறு இல்லறத்து இருவர் துறவறத்து முனிவர்க்கு நீதியும் நெறியும் கூறுமாறு இந்நிகழ்ச்சி அமைந்து கிடக்கிறது. ○



[சென்ற இதழ்த் தொடர்ச்சி]

அதற்கப்புறம் எவ்வளவோ சம்பவங்கள் நடந்து விட்டன. கதைகளில் சொல்வது போல் "பாலத்திற் கடியில் எவ்வளவோ தண்ணீர் ஓடி விட்டது" என்னுடைய ஹாஸ்டல் விலாசத்திற்குப் பார்வதியிடமிருந்து அடிக்கடி கடிதம் வரும் "என் அன்புள்ள கண்ணு! நன்றாகப் படித்துச் சுகமாகத் திரும்பி வாருங்கள். நான் எப்படியோ இருந்து விட்டு போகிறேன். என்னைப் பற்றி ஒரு கவலையையும் மனத்தில் வைக்காமல், நன்றாகப் படிக்கவும்!" இப்படியெல்லாம் எழுதுவாள்.

ஆனால் காலம் எங்களைச் சதி செய்து விட்டது. வாழ்க்கை எங்களை மோசம் செய்து விட்டது. அன்று வந்த பார்வதியின் கடிதம்.

"அன்புள்ள!........!

நான் உங்களுக்கு என்ன எழுதுவது, எப்படி எழுதுவது என்றே தெரியவில்லை. இந்தப் பரந்த உலகில் என்னை விடத் துரதிர்ஷ்டசாலி ஒருத்தியும் இருக்க முடியாது. என் நெஞ்சம் வெடித்துவிடும் போலிருக்கிறது. என் இதயம் சுக்கு நூறாகத் தெறித்து விடும் போலிருக்கிறது. என்னவென்று சொல்வேன். அப்பாவுக்கு உடம்பு சரியாக இல்லை என்று முன் கடிதத்திலேயே குறிப்பிட்டிருந்தேன் அல்லவா? முந்தினநாள் இரவு ரொம்பத் தடபுடலாகப் போய்விட்டது. சொந்தக்காரருக்கெல்லாம் சொல்லி அனுப்பி எல்லோரும் வந்து விட்டார்கள். 'என்னைக் கூப்பிடுகிறார்' என்றார்கள். நான் அவர் அருகில்போனேன்: அறையில் இருந்த எல்லோரையும் வெளியே போகச் சொன்னார். எனக்கு மனம் 'திக் திக்' என்று அடித்துக்கொண்டது. என்னை அழைத்து அன்புடன் அணைத்துக் கொண்டார். என்னையும் மீறி எனக்கு அழுகை வந்து விட்டது. என்னைப் பார்த்து அவருக்கும் மனம் கலங்கிப்போய்விட்டது. வெதும்பும் நெஞ்சுடனே "பார்வதி! நீ புத்திசாலிப்பெண். இறந்து போய் விடுவேன் என்று எனக்கு நன்றாகத் தெரிகிறது.நான் இப்பொழுது

சில வார்த்தைகள் கூறப் போகிறேன். கவனமாகக்கேள். நீ என்னுடைய ஒரே பெண். ஏதோ என காலத்தில் கஷ்டப்பட்டுக் கொஞ்சம்பொருள்தேடிவைத்திருக்கிறேன். ஆனால் உனக்கு ஒரு நல்ல காரியம் செய்து பார்க்கக் கொடுத்து வைத்காத பாவியாகி விட்டேன். பார்வதி! என் கண்ணே! நான் சிறுவயதிலேயே என்னுடைய அக்கா — திருப்பூரிலிருக்கிருளே அவளுக்கு மகன் பிறந்து- எனக்கும் பெண் பிறந்தால்- என்னுடைய பெண்ணை அவளுடையமகனுக்குக் கொடுப்பதாகச் சத்தியம் செய்து கொடுத்திருக்கிறேன். அவனும் இங்கு வந்திருக்கிருன். உனக்கு நான் முனபே இதைச் சொல்ல வில்லை. மெள்ளச் சொல்லிக் கொள்ளலாம, என்றிருந்தேன். அதற்குள் இப்படியாகி விட்டது. நீ படித்த பெண். அவனும் படித்து நல்ல உத்தியோகத்திலிருக்கிருனம! நீ அவனை உன் அத்தைமகனைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டும். சாகப்போகிற உன் தகப்பனின் வேண்டுகோள். என் கண்ணே! இதை மறுப்பாயா?'' என்று நெஞ்சு தளதளக்கக் கூறினர்.

அன்பே, எனக்கு எப்படித்தான் இருக்கும்! என்ன விசித்திர உலகம். காதல் அங்கே! மனத்தை உங்களிடம் பறிகொடுத்தேன். ஆனால் என்னைக் கண்ணுக்குக் கண்ணுக வளர்த்த தந்தை- என்னை மனங் கோணுமல் இத்தனை காலம் காப்பாற்றியவர்-இறக்கும் தருவாயில் அவர்விடுத்த அந்த வேண்டுகோள்- என்னுல் ஒன்றுமே சொல்ல முடியவில்லை. கண்களில் நீரைப் பெருக்கியவாறு- கலங்கிய உள்ளத்துடன் நின்றேன்.

“என்னம்மா பார்வதி! உனக்குச் சம்மதமில்லையா? உன் தகப்பனின் நெஞ்சம் வேகாதடி!'' என்ருர்.

நான் என்ன செய்வதென்றே தெரியாமல் உணர்ச்சிப் பெருக்கினல் ‘நீங்கள் ஒன்றும் கவலைப்பட வேண்டாம். தாங்கள குறிப்பிடும் அவரையே மணந்து கொள்கிறேன். இது உறுதி!’ என்று கூறி நிறுத்தினேனே இல்லையோ - ஒருவித மலர்ச்சி அவர் முகத்தில் தோன்றி மறைந்தது. அவர் இறந்து விட்டார்.

கண்ணு! உங்கள் அன்பிற்கு,உங்களுடைய உண்மைக் காதலுக்கு நான்சிறிதும் தகுதியற்றவள். என்னை மறந்து விடுங்கள். ஏதோ சந்தித்தோம ‘ஏதோபிரிந்தோம்’ என்பதுடன் நிறுத்திக் கொள்வோம். என் பேரில் தப்பு இருக்கலாம். மன்னிக்க வேண்டும். உங்கள் பார்வதி செத்துப் போய் விட்டாள். அவளைத் தலை முழுகி விடுங்கள்''.........”

அதற்குமேல் என்னுல் படிக்க முடியவில்லை. பித்துப் பிடித்தது போலாகி விட்டது. எப்பொழுதாவது அண்ணனிடமிருந்து கடிதம் வரும். வாழ்க்கை என்னைப்பொறுத்த வரையில் ஒரே நாசமாய்ப் போய் விட்டது. காலம் கொஞ்சம் மருந்துபோல் வேலை செய்தாலும்- எனக்குப் பல நண்பர்கள் ஹாஸ்டலில் இருந்தாலும் “கடல் நிறைய நீராகத்தான் இருக்கிறது. .ஆனல் சக்கிரவாகப் பட்சிக்குத் தாகம்

தணிய மழை நீர் வேண்டுமே" என்ற கவியின் அடிகள்தாம் என் மனத்திற்குத் திரும்பத் திரும்ப ஞாபகத்திற்கு வந்தன.

பார்வதிக்குக்கல்யாணம் முடிவாகியதாம். பத்திரிகை கூட எனக்கு வந்தது. வரச் சொல்லி அண்ணு எனக்கு எழுதி யிருந்தார். மனம் மரத்துப்போயிருந்தது. அதில் உணர்ச்சிகே இடமில்லை. "பரீட்சை சமயமாக இருக்கிறது. வருவதற்கில்லை மன்னிக்கவும்" என்று கடிதம் போட்டு விட்டேன்.

விடுமுறையில் கூடக் கோவைக்குப் போக மனம் வரவில்லை. ஹாஸ்டலிலேயே இருந்தேன். மாப்பிள்ளையும்-மாமியார் வீட்டோடு வந்து கடையைப் பார்த்துக் கொண்டிருக்கிருர்- என்று தெரிந்தது. அப்படி இப்படி ஒரு வருடம் கழிந்தது. என்னுடைய போக்கைக் கண்டோ என்னவோ - அண்ணு சென்னைக்கே மாறுதல் கேட்டுக் கொண்டு வந்துவிட்டார்.

காலம் கொஞ்சம் கொஞ்சமாக மருந்து போல் இருந்து வேலை செய்தது. மறுபடியும் வீட்டு வாசம். ஆனல் ஏதோ ஒன்றை- இழக்கக் கூடாத ஒன்றை- இழந்து விட்டதாக எண்ணி எண்ணி ஏங்கியது என் உள்ளம். சில சமயங்களில் - அண்ணி வேறு பார்வதியின் பெயரைப் பேச்சு வாக்கில் ஞாபகப் படுத்தும பொழுது- என் மனத்தை வாள் கொண்டு அறுப்பது போலிருந்தது. இதன் மத்தியில் பார்வதி ஒரு குழந்தைக்குத் தாயான செய்தி வேறு வந்தது. புத்தகப் படிப்பில் அப்படி இப்படிப் பழைய காலச் சம்பவங்களை கொஞ்சம் மறக்க முயற்சி செய்து கொண்டிருக்கும் பொழுது-இன்றுகாலை- இதோ என் எதிரில்- நான் யாரை உயிருக்கு உயிராய் நேசித்தேனே அதே பார்வதியின் கணவர்.....

''சம்யுக்தா, சம்யுக்தா''- என்ற பார்வதியின் குரல் கேட்டு என் சிந்தனை அலைகள் கலைந்தோடி விட்டன. எழுந்து நின்று குழந்தையைத் தூக்கிக் கொண்டுபோய் அவளிடம் கொடுத்தேன்.

"ஏண்டி, இவ்வளவு நேரம் அந்த அண்ணனிடம் என்னடி விளையாடிக் கொண்டிருந்தாய்! போக்கிரி!" என்று செல்லமாகக் கூறிப் பின்பு என்னை நோக்கி "அவர் எங்கே? தூங்குகிருரா? இன்றைக்கு எக்ஸிபிஷனுக்குப் போகலாமா? உங்களுக்கும் லீவு தானுமே? எத்தனை மணிக்குப் புறப்படலாம் அண்ணு?" என்று கேட்டாள்.

அவளை உற்று நோக்கினேன். களங்க மற்ற முகம். அழகுக்கு அழகு செய்யும் சிறு குங்குமப் பொட்டு. சல சலக்கும் புதுப்பட்டுப் புடவை. பட்டத்து ராணி போல் இருந்தாள்! எவ்வளவு களங்க மற்ற முறையில் பேசினுள்! பெண்களே இப்படித்தானே? காலம் மாறினல் - இடம் மாறினல் - சந்தர்ப்பம் மாறினல் - எல்லாவற்றையும் மறந்து ஒன்றுமே அறியாதவர்கள் போலப் பேசும் திறமை உடையவர்கள் போலிருக்கிறது!

"நாலு மணிக்கெல்லாம் போகலாம். அப்பொழுதுதான்

சீக்கிரமாக வர முடியும்.'' என்றேன்.

''கண்டிப்பாக நாலு மணிக்கெல்லாம் அழைத்துக் கொண்டு போக வேண்டும். முன் ஒரு தடவை, டிமிக்கி கொடுத்தீர்களே ஞாபகமிருக்கிறதா? என் கல்யாணத்திற்கு வராமல்- அந்த மாதிரி இப்பொழுதும் செய்து விடப் போகிறீர்கள்'' என்று கூறிக் கலகல வென்று சிரித்துக் கொண்டே கீழே போய் விட்டாள்.

அண்ணி கைவேலையாய் இருக்கிறதென்று எக்ஸிபிஷனுக்கு வரமாட்டேன் என்று சொல்லி விட்டாள். அண்ணா ஆபீசிற்குப் போய் விட்டார். பார்வதியின் கணவரோ, தனக்கு இன்னொரு இடத்திற்கு அவசரமாகப் போக வேண்டியிருப்பதாகவும், பார்வதி வேண்டுமானால்—என்னை அழைத்துக்கொண்டு போய் வரட்டும் என்று கூறிவிட்டார். ஆகவே கடைசியில் நானும், பார்வதியும் — அவளுடைய ராணி சம்யுக்தா தேவியும் மட்டுமே கிளம்ப வேண்டியதாயிற்று.

பஸ்ஸில் போகும் பொழுதும் கடைகளைச் சுற்றி வரும்பொழுதும் — எல்லாவற்றையும் விளக்கமாகக் கூறிக்கொண்டே வந்தேன். என்னதான் இருந்தாலும் பழைய பார்வதி அல்லவே? ஒரு காலத்தில் என்னுடைய அன்புக்குகந்தவளாக இருந்திருக்கலாம். ஆனால் இப்பொழுது! கோவையின் பழைய வாழ்க்கையைப்பற்றி— தன் உள்ளத்தைச் சற்றுத் திறந்து காட்டுவாளென்று தான் எண்ணினேன். ஆனால் அதைப்பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை அவள்! பெண்களின் உள்ளம் இருக்கிறதே அது மிகவும் விசித்திரமானது. ஆழங் காண முடியாதது. கோவையில் 'என்னை மறக்கமாட்டாயே' என்று கையடித்துச் சத்தியம் வாங்கினவள்—இன்று எல்லாவற்றையும் மறந்துவிட்டாளா?

எல்லாம் பார்த்துவிட்டு 'வித்யா நகருக்'கருகில் உட்கார்ந்தோம், என்னால் தாள முடியவே இல்லை. நானே ஆரம்பித்தேன்.

''பார்வதி, உன் கல்யாணத்திற்கு நான் வரவில்லையே என்று என் பேரில் கோபமா? உண்மையைச் சொல். நான் உன்னை ஏதோ ஏமாற்றிவிட்டதாக நினைக்கிறாயா? இப்படிக் கேட்டதற்காக என்னை மன்னித்து விடு''

நான் இப்படிச்சொன்னேனோ இல்லையோ அந்த இரு கரு விழிகளிலும் நீர் ததும்ப ஆரம்பித்தது. ஆனால் லேசாக அதைத் துடைத்துக்கொண்டு

''கண்ணா, உன் பேரில் எனக்கென்ன கோபம்? பெண்ணாய்ப் பிறந்துவிட்டேன். ஆனால் எனக்கு இதயம் இல்லையா? எனக்கும் இதயம் உண்டு. உணர்ச்சி உண்டு. ஆனால் உலகம் அதை உணரவில்லை. அது உன்னுடைய தவறில்லை. என் கணவரைப்பற்றி நான் குறை கூற முடியாது. குறை கூறினால் பெருத்த பாவியாவேன், அவர் மிகவும் நல்ல

வர். பெருந் தன்மையானவர். என்னை எஜமானி போல் நடத்துகிறார். ரொம்பவும் மதிப்பாக என்னை நடத்துகிறார். ஆனால் என் உள்ளத்தை அப்படியே அவரிடம் அர்ப்பணிக்க என்னால் முடியவில்லையே! நான் என்ன செய்வேன்! உன்னுடைய குறும்புத் தனமும், குறுகுறுத்த பார்வையும் அவரிடம் இல்லையே கண்ணு! அவருடைய பெருந் தன்மையான குணத்தைக்காட்டிலும் உன்னுடைய விஷமம் பொருந்திய விளையாட்டுகள் என்னைப் பைத்தியமாக அடித்துவிட்டனவே! அவர் என்னைத் தொட்டுத் தாலி கட்டியவர். அவருக்கு நான் துரோகம் நினைக்கக் கூடாதுதான். ஆனாலும் உன்னை நினைத்து, பழையகால கோயமுத்தூர் வாழ்க்கையை நினைத்து நினைத்து, எத்தனை தலையணைகளைக் கண்ணீரால் நனைத்திருக்கிறேன் தெரியுமா? இப்பொழுது கூட எதற்காகப்பட்டணம் வந்தேன் தெரியுமா? ஊரைச்சுற்றிப் பார்க்கவா? இந்த எக்ஸிபிஷனகளைப் பார்க்கத்தான் முந்நூறு மைல் தூரம் ஓடிவந்தேன் என்று நினைக்கிறாயா? இடையவே இடையாது. உன்னைப் பார்க்கலாம்—உன் அருகில் சில நாளைக்காவது இருக்கலாம் என்ற நப்பாசையினால் தான்! நான் சொல்வது குற்றமாயிருந்தால் — பெண்களின் கற்புக்கு இழுக்குத் தேடுவதாக இருந்தால் அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை! இதயத்தில் புரையோடிவிட்டபுண் எளிதில் ஆறாது. என கணவருக்குத் துரோகம் புரிய நினைக்கமாட்டேன். ஆனால் அதற்காக உன்னை மறக்கவும், என்னால் முடிவதில்லை, நீ என்ன வேண்டுமானாலும் நினைத்துக்கொள்! என் வாழ்க்கை இப்படித்தான் சென்றாக வேண்டும். வேறு வழியில்லை!''

சுத்தமாக, அப்பட்டமாக, ஒளிவு மறைவின்றித் தன் உள்ளத்தைத் திறந்து காட்டினாள், அவள்! கண்களில் நீர் கலங்க அவள் கூறிய வார்த்தைகள் என் இதயத்தைச் சுக்கு நூறாக்கிவிட்டன. ஒன்றும் என்னால் பேசமுடியவில்லை. என்ன பேசமுடியும்? பேசாமல் இருந்தேன்.

அப்படி இப்படி நாட்கள் ஓடிவிட்டன. நம்முடைய தேவைக்காகக் காலம் சற்று வேகக் குறைவாகப்போகிறதா என்ன? அதற்கப்புறம் எத்தனையோ தடவை பார்வதியை அங்கும் இங்கும் அழைத்துக் கொண்டு போய்வர எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. புதுப் பட்டுப்

ஏறிட்டுப் பார்ப்பார் யார்?

அந்தகார வாசலில் சாயைகள் போல் உருவங்கள் குனிந்தபடி வருகின்றன. குனிந்தபடி வணங்குகின்றன. “எனக்கு மோட்சம்! எனக்கு மோட்சம்!” என்ற எதிரொலிப்பு. அந்தக்கோடிக் கணக்கான சாயைகளின் கூட்டத்தில் ஒருவராவது சிலையை ஏறிட்டுப் பார்க்கவில்லை! இப்படியே தினமும்... நாட்கள், வருடங்கள் நூற்றாண்டுகள் அலைபோல் புரளுகின்றன—அந்த அனந்தோடி வருஷங்களில் ஒரு சாயையாவது ஏறிட்டுப் பார்க்க வேண்டுமே!

—புதுமைப் பித்தன்

புடவை சலசலக்கச் சொர்ண விக்கிரம் போன்ற குழந்தையை இடுப்பில் வைத்துக்கொண்டு பட்டத்து ராணிபோல் அவள் வந்து நின்று "என்ன, போக 'லாமா?" என்று கேட்கும் பொழுது அப்படியே மயக்கம் போட்டதுபோல் நின்று விடுவேன் நான்.

அன்று ஊருக்குப் போனார்கள் அவர்கள். ரயிலேற்ற ஸ்டேஷனுக்கு எல்லோரும் போயிருந்தோம். என் மனம் மரத்துப் போயிருந்தது. அதில் உணர்ச்சிக்கே இடமில்லை. ரயில் புறப்படும் நேரம். எல்லோரிடமும் விடைபெற்றுக் கொண்டாள் பார்வதி. கடைசியாக என்னைப் பார்த்து "போய்விட்டு வருகிறேன், கண்ணா" என்று கூறிவிட்டுக் கை கூப்பினாள். அந்தப்பேசும் இரு சிறுவிழிகள் எனக்கு— ஆயிரமாயிரம் செய்தியைக் கூறின. பதில் சொல்ல வாயெடுத்தேன். ஆனால் பேசமுடிந்தால் தானே! உடைந்த உள்ளத்துடன் வீடு திரும்பினேன்.

இரவு உணவு செல்லவில்லை. உறக்கமும் வரவில்லை. மனத்தைத் தடியால் அடித்துப் போட்டது போலிருந்தது. மன அமைதிக்காக மேஜையின் பேரில் கிடந்த புத்தகத்தைப் புரட்டினேன்.

"வாழ்க்கைச் சந்தையில் சில சமயங்களில் நாம் விரும்பும் பொருள் கிடைப்பதில்லை. அப்படியே கிடைத்தாலும் அந்தச் சமயங்களில் அந்தப்பொருளை வாங்க நம்மிடம் சக்தியிருப்பதில்லை" என்ற அண்ணாவின் வாக்கியம் என் கண்முன்னே வந்து நின்றது. ●





இதுவல்ல வேளை

-வாணிதாசன்

உண்ணுதற்குப் பொருள்தேடிச் சென்றாரோ? இல்லை!
உனைமணக்கப் பொருள்தேடிச் சென்றாரோ? இல்லை!
பெண்ணரசி! என்தலைவி! உன்தமிழை நாட்டைப்
பிறர்க்கடிமை ஆக்கவரும் இந்தியினை வெட்டி
மண்ணோடு மண்ணாக்கப் புறப்பட்டுப் போனார்;
வந்திடுவார் கலங்காதே வாகைமலர் சூடி;
பெண்ணெல்லாம் கோழைகளா? உயிரன்றோ நாடு!
பிரிவெண்ணி வாடாதே! இதுவல்ல வேளை!

அன்றொருநாள் உனைத்தேடி நள்ளிரவில் வந்தார்;
அடர்கிளையில் புள்ளெழுப்பி உன்வரவுக் காக
நின்றிருந்தார் தோட்டத்தில்; உனைக்கொண்டு விட்டேன்;
நிலைதெரியாக் குடியரைப்போல் கூத்தடித்தீர் கண்டேன்;
இன்றுன்னை மறப்பாரோ? போடிபோ பேதாய்!
இன்றமிழை உன்னாட்டைக் குலைக்கவரும் இந்திப்
புன்மொழியைப் புறங்கண்டு வந்துன்னைச் சேர்வார்;
பிரிவெண்ணிக் கலங்காதே! இதுவல்ல வேளை!

தைபிறந்து விட்டதடி! ஊரெல்லாம் இன்றோ
தடபுடலே! என்சொல்வேன் பொங்கலோ பொங்கல்;
மைவிழிகள் நீர்சிந்த மாலைவரச் சோய்கும்
தாமரையைப் போலுனது வாட்டமுகம் கண்டேன்!
நெய்விளக்குச் சுடர்போலத் தமிழர்திரு நாளில்
நிலைகுலைந்தாய் என்தலைவி! கோழைகளா பெண்கள்?
உய்வதற்கு நாமெல்லாம் தமிழுய்ய வேண்டும்;
உயிர்த்தலைவர் பிரிவெண்ண இதுவல்ல வேளை!

கலை யுலகம்

சென்னை ஒற்றை வாடைத் தியேட்டரில், டி. கே. எஸ். சகோதரர்கள் தங்களது ஒப்பற்ற நாடகமான "ஔவையார்" நாடகத்தை, மிகவும் வெற்றிகரமாக இரண்டாவதுமுறையாக நடத்தி வருகின்றார்கள்! கதை, சாதாரணக்கதை! அதுவும் கதாநாயகன் கதாநாயகியற்ற — ஒரு தமிழ் மூதாட்டியின் வரலாற்றைக் கலையழகுததும்ப — பாமரனும் கண்டு ரசிக்கத்தக்க முறையில் நடிக்கும் டி. கே. எஸ். சகோதரர்களை எவ்வளவு போற்றினாலும் தகும்! குற்றங் குறைகள் கூறமுடியாதபடி கடைசிவரையில் விறுவிறுப்புடன் செல்கிறது நாடகம்! இந்நாடகத்தின்மூலம் டி. கே. எஸ். சகோதரர்கள் தமிழ்மொழிக்கும், தமிழ்மக்களுக்கும் மிகுந்தசேவைசெய்தவராகின்றார்கள். பேசும்படங்களைவிட நாடகங்களின் மூலமாகத்தான் எத்தகைய புரட்சிகரமான கருத்துக்களையும் மக்கள்மனத்தில் பதிய வைக்க முடியும் என்பதற்கு "ஔவையார்" நாடகமே போதிய சான்றாகும். மூன்றே மணி நேரத்தில் உழவின்மேன்மை, கல்வியின் சிறப்பு, பெண்ணின்பெருமை நாட்டுப்பற்று, மொழிப்பற்று முதலான சிறந்த கருத்துக்களை எவ்வளவு எளிதாக மக்கள் மனத்தில்பதிய வைத்து விடுகிறார்கள்! சிறந்த சினிமாப் படங்களுக்குப் பரிசளிக்க முன்வந்திருக்கும் சென்னை சர்க்கார், சிறந்த நாடகங்களுக்கும் பரிசளிக்க முன்வர வேண்டும். அதுவும் "ஔவையார்" நாடகத்துக்கு உடனடியாகப் பரிசளித்து டி. கே. எஸ். சகோதரர்களைப் பெருமைப்படுத்த வேண்டியது, சென்னை சர்க்காரின் கடமை என்றே நான் கூறுவேன்.



நாடகம் முற்றுமே தமிழ்மணம் கமழ்கின்றது. நாடக ஆசிரியர் பி. எத்திராஜ் அவர்கள் வசனங்களை மிகவும் அழகாக எழுதியிருக்கின்றார்! தமிழ்நாட்டுக்கவிகளின் இனிமை நிறைந்த பாடல்களைத் தக்கசந்தர்ப்பங்களில் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். புராண நாடகமாயினும் தற்காலப் பிரச்னைகள் மறைமுகமாகப் பிரசாரம் செய்யப்படுகின்றன. காந்தியடிகளின் அஹிம்சைக்கொள்கையும், உலகயுத்தம் ஏற்படுமோஎன்று மக்கள் பீதிகொண்டுள்ள இந்நேரத்தில், யுத்தத்தினால் ஏற்படும் கொடுமையும், ஔவையார் வாயிலாக மக்களுக்கு எடுத்துக்கூறப் படுகின்றன. "வீரம்வேண்டும்," அதுவும் "அன்புகலந்தவீரம்வேண்டும்". என்று ஔவையார் கூறுவதை யார்தான் மறுக்க முடியும்?

இந்நாடகத்தில் வரும் ஒவ்வொரு காட்சியும் நம்மனத்தைவிட்டு அகல முடியாதவை. சிலகாட்சிகளில் நம்மையுமறியாமல் மயிர்க்கூச்செறிகின்றது. "பெருமை கொள்வாய்தமிழா" என்றபாட்டைப் பாரி மகளிர் பாடும்போது, பாட்டின்முடிவில், ஔவையாரும் உணர்ச்சிப் பெருக்கால் அவர்களுடன்சேர்ந்து பாடும் கட்டமும், பாரிமகளிரின் எளியநிலையை அறிந்த ஔவையார் அவர்களிருவரையும் அணைத்துக் கொண்டு மனம்வருந்தும் கட்டமும் நாடகம் பார்ப்பவர்களுக்கு

மயிர்க்கூச்சத்தை உண்டாக்கிவிடுகின்றன! அவ்வளவு உணர்ச்சிமிக்க கட்டங்கள்!

ஔவை மூதாட்டியாக திரு. டி. கே. சண்முகம் அவர்கள் மிகத்திறம்பட நடிக்கின்றார்கள்! இவர் ஒருவரைத்தவிர, வேறெந்தத் தமிழ்நாட்டு நடிகரும், ஔவையாரின் பாகத்தை இவ்வளவு திறமையாக நடிக்கமுடியாது என்று திட்டமாகக் கூறலாம்! தமிழ்நாட்டு நடிகர்களுக்குள்ளேயே, நடிப்பில் முதலிடம் பெறவேண்டியவர் திரு டி. கே. சண்முகம் ஒருவர்தான் என்றே ஔவையார்நாடகத்தைப் பார்த்த ஒவ்வொருவரும் கூறுவர்! ஔவையாரின் ஆத்திசூடியைப் படிக்குங்கால், நாம் கற்பனைக் கண்கொண்டு பார்க்கும் ஔவையார்தான், தத்ரூபமாக மேடையில் நம்கண்முன்னே காட்சியளிக்கின்றார்! "முள்ளில் ரோஜா" நாடகத்தில் கட்டிளங்காளையைப் போல், கதாநாயகன் ராமனாதனாக வந்த, அதேசண்முகம்தானா கூன் விழுந்த முதுகோடு, முகத்தில் முதுமையின் ரேகைகள் தோன்ற, பொக்கைவாயுடன், கை கால்கள் தள்ளாடி நடந்து ஔவைமூதாட்டியாக நடிக்கின்றார் என்ற சந்தேகம் ஏற்படுகின்றது! அசல் ஔவையாராகவே மாறிவிடுகின்றார் திரு. டி. கே. சண்முகம்! அவரது நடிப்பைப்பற்றி ஒரேவார்த்தையில் கூறவேண்டுமானால் திரு. டி. கே. சண்முகம்தான் ஔவையார், ஔவையார்தான் டி. கே. சண்முகம்!

இவரின் நடிப்பைக் காணத்தான், மக்கள் தினமும் திரள்திரளாக இந்நாடகத்திற்குச் செல்கின்றார்களென்றால் அது மிகையாகாது!

நகைச்சுவை ஆபாசமற்றுக் கதைக்குச் சம்பந்தப்பட்டதாகவே அமைந்திருப்பது போற்றத்தக்கது. சிவதாணுவும், ராமசாமியும், நிமிஷத்துக்கு நிமிஷம் நகைப்பை யுண்டுபண்ணிக் கொண்டிருக்கின்றார்கள் நாடகம் பார்ப்பவர்களிடையில்! சில இடங்களில் சிவதாணுவின் நடிப்பு மிகையாகக் காணப்பட்டாலும், அது அவ்வளவாகத் தெரியவில்லை. மொத்தத்தில் நாடகத்தில் தோன்றும் எல்லா நடிகர்களும் பட்டுத்துணி வேண்டுமென்று அழும் சிறுவன்முதல், ஔவையாரின் தந்தையாக நடிப்பவர்வரை தாங்கள் ஏற்றுக்கொண்ட பாத்திரங்களை உணர்ந்து மிகவும் அனுபவத்துடன் நடிக்கின்றார்கள்!

ஒருமுறை 'ஔவையார்' நாடகத்தைப் பார்த்தால் மறுமுறையும் கட்டாயம் பார்க்கத்தோன்றும். சிறுவர்கள்முதல் பெரியோர்வரை பார்த்தின்புறவேண்டிய நாடகம்! ஒவ்வொரு தமிழனும் தன்குடும்பத்துடன் சென்று பெருமையுடன் காணவேண்டிய நாடகம் இந்த ஔவையார்!

ஔவையார் போன்ற சிறந்த நாடகங்களை, தமிழன்னையின் கழலடிகளில் சமர்ப்பிக்க டி. கே எஸ். சகோதரர்கள் மேன்மேலும் முயற்சிக்கவேண்டுகிறேன்.



இருண்ட காலப் புலவர்கள்

மு. அண்ணுமலே

பாடிப் பிழைத்த புலவர்களுக்குத் தமிழ் நாட்டில் பஞ்சமில்லே. ஒவ்வொரு புலவருக்கும் ஒவ்வொரு புரவலர் இருந்து வந்தனர். பணக்காரர்கள் தங்கள சமூகத்தில் ஒவ்வொரு புலவரை வைத்து ஆதரிப்பதைப் பெருமையாக எண்ணினர் இதனுல் "தமிழைக் கற்றது வயிற்றுப் பிழைப்புக்காக" என்று வாய் கூசாமல் சொல்ல ஆரம்பித்தனர் புலவர்கள்.

இன்றைய ஆராய்ச்சியாளர்கள் முடிவுப்படி கி. பி. 14-ம் நூற்ருண்டிலிருந்து 18-ம் நூற்ருண்டுவரை, தமிழ் எண்ணற்ற 'பிச்சைக்காரர்'களின் கையில் அகப்பட்டுக்கொண்டது. அதாவது கம்பன் ஒட்டக்கூத்தன், புகழேந்தி, ஐயங் கொண்டான் முதலியவர்களின் காலத்திற்குப் பிறகு, தமிழ் இலக்கிய உலகிலே இருள் படர ஆரம்பித்தது. கையிலே யாப்பருங்கலக் காரிகையையும், கக்கத்திலே உவமான சங்கிரகத்தையும் வைத்துக்கொண்டு பணக்காரர்களின் வீட்டு வாயிற்படி ஏறி இறங்குவது புலவர்களின் முக்கிய தொழிலாக மாறியது. சங்ககாலத்திலிருந்து இந்தத் தொத்து நோய் இருந்து வந்திருக்கிறது என்ருலும், இடைக் காலத்தில் தான் இது படர்ந்து விரிந்து தமிழுக்குச் 'சல்லித்தனத்தை' ஏற்றி வைத்தது. பிச்சைக்காரர்களின் கையில் அகப்பட்டுக் கொண்டதால் தமிழுக்கும் அந்தப் பிச்சைக்காரத்தனம் அழியாத கறையாக ஏற்பட்டது.

புலவர் எவனிடம் பரிசுபெற வேண்டும் என்று எதிர்பார்க்கிருரோ அவன்மேல் ஒருபாட்டு அல்லது ஒரு 'உலா' அல்லது ஒரு கோவை ஏதாவது ஒன்று பாடுவார். அவன் பொனனுய்ப் பொருளாய் நாடாய் நகராய் நல்க வேண்டும் என்று எதிர்பார்ப்பார். இந்த இருள் படர்ந்த இடைக்காலத்தில் தோன்றிய எந்தப் பாட்டைப் பார்த்தாலும், யாரேனும், ஒருவனைப் புகழ்ந்து பாடியதாக இருக்கும். அல்லது தராதவனை இகழ்ந்து பாடியதாக இருக்கும். தந்'தால் இசை புராணம்; தராவிட்டால் வசை புராணம்; இரண்டும் போனுல் ஏதாவது ஒரு ஸ்தல புராணம்: இதுதான் அவர்களின் ஏட்டுக்கும் எழுத்தாணிக்கும் இருந்துவந்த சம்பந்தம். 'அறம் பாடவா? அல்லது மறம் பாடவா?' என்பது அவர்களின் 'மிரட்டல்' வேலே! இந்த நான்கு நூற்ருண்டுகளிலே வாழ்ந்த புலவர்கள், உண்மையான இலக்கிய ஆக்கம் எது என்பதனையும், இலக்கியத்தின்

அடிப்படை நோக்கம் எது என்பதனையும் அறியாது வாழ்ந்தனர். பயன்படாத குப்பைப் பாட்டுக்களே இந்தக் காலத்தில் மலிந்தன.

ஒரு பிச்சைக்காரன், "புண்ணியவானே, சாமி, தர்மராசா" என்று உரை நடையில் சொல்லுவான். ஆனால் இந்தப் புலவர்கள் அதையே செய்யுளில் சொன்னார்கள். இது தான் வேறுபாடு!

காரிகை படித்துக் கவி எழுதத் தெரிந்தவர்கள் எல்லோரும் பாடுந் தொழிலை மேற்கொண்டுபோய்த் தங்கள் பாட்டை நீட்டுவார்கள். பாட்டைப்பற்றி ஒன்றும் தெரியாத பணக்காரன் ஏதோ கடனுக்குக் கொஞ்சம் பணம்கொடுத்தனுப்புவான். தொழிலுக்கு இடையூருக மற்றொரு தொழிலாளி யிருந்தால் அவனோடு போட்டி, பாட்டுக்குப் பாட்டு... எதிர்ப்பாட்டு... இப்படி நடக்கும். இது இடைக்காலத்தின் இலக்கிய சரிதம்.

ஒரு தலைவனுக்கும் தலைவிக்கும் காதல்நடக்கும் கட்டத்தை ஒரு புலவன் விவரிக்கிறன் என்று வைத்துக்கொள்ளுங்கள். தன்னை ஆதரிக்கும் புரவலனை அந்தப் பாட்டில் நுழைக்கவேண்டும் என்று முயன்றிருக்கிறன்புலவன். பாட்டுடைத் தலைவன் என்றும் கிளவித் தலைவன் என்றும இரண்டு தலைவர்கள் உண்டாக்கப்பட்டனர். பணங் கொடுப்பவன் பாட்டுடைத் தலைவன். பாடல் நுதலிய பொருளுக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும் முக்கியமான தொடர்பு ஒன்றும் கிடையாது. பாட்டுடைத் தலைவன் வீரனுகவும் சூரனுகவும் வர்ணிக்கப்பட்டான். பாட்டுக்கும் பாட்டுடைத் தலைவனுக்கும சம்பந்தமில்லாமையை உணர்ந்திருந்தும், புலவன் விட மனமில்லாமல், தலைவன் அல்லது தலைவிக்குரிய அடைமொழிகளாக ஆக்கிவிடுகிறன். 'ஆனைகள் திரிகின்ற புலிகள் ஓடுகின்ற, இப்படிப்பட்ட அப்படிப்பட்ட தஞ்சைவாணனது நாட்டிலே உள்ள தலைவியே!' என்று எழுதுவான். மேற்சொன்ன அடைமொழிகள் தலைவிக்கும், நுதலிய நிகழ்ச்சிக்கும் முக்கியமானதல்ல; வேண்டியனவும் அல்ல. புலவன் வீணுகச் சொற்களைப் பயன்படுத்தி இலக்கிய நயத்தைக் கெடுத்திருக்கிறன்.

'தஞ்சைவாணனது நாட்டிலே உள்ள தலைவி' என்பதிலே என்ன நயம் தோன்றியிருக்கிறது? சிறப்பின்றிச் சொல்லடுக்கிக் கட்டிய செய்யுளுருவத்தை நாம் காண்கின்றோம். சுருங்கச் சொன்னல் புலவன் செஞ்சோற்றுக்கடன் கழிக்க வழி தெரியாமல் கழித்திருக்கிறன் என்று தான் சொல்ல வேண்டும். மானமின்றிப் புலவன் வயிறு வளர்த்த கதையை, முகஸ்துதி செய்து செய்து வாழ்ந்த நிலையைத் தானே அந்த இரண்டு வரிகளில் சொல்லுகிறன்!

தங்களுக்குப் பிடித்தமான, தங்கள் மனத்தைக் கவர்ந்த ஒரு மனிதனைப் பற்றிக்கவிஞன் பாடலாம். ஆனல் அது மட்டுமே அவர்கள் தொழிலாக இருக்கக் கூடாது. எப்போதுமே வாழ்த்துப்பா பாடுவது,

இரங்கற்பா பாடுவது என்றிருந்த புலவர்கள் மேனாடுகளில் இல்லை. மேனாட்டுப் புலவர்கள் தங்கள் மொழிக்கு இலக்கியச் செல்வத்தைக் குவித்தனர். அதற்காக அவர்களைப் பல பணக்காரர்கள் ஆதரித்தனர். கோல்டுஸ்மித், ஜான்ஸன், கீட்ஸ் போன்ற புலவர்களை ஆதரித்த சில பணக்காரர்களும் உண்டு. அதற்காக அவர்கள் வள்ளல்களுக்குப் பாமாலை பாடிச் சூட்டவேண்டும் என்று நினைக்கவில்லை. உண்மையான வள்ளல்கள் அவ்விதம் எண்ணமாட்டார்கள். தானே திறமை கண்டு முன்வந்து உதவி செய்வர். புரவலர்கள் பொதுநல வளர்ச்சியைச் சிந்திக்கிறார்கள்.

கம்பனை ஆதரித்தார் சடையப்பவள்ளல். அவர் தமிழுக்கு அளித்தது கம்பராமாயணம். புகழேந்தியை ஆதரித்த அரசனுக்குப் புகழேந்தி நளவெண்பாவைக் கொடுத்தார். தமிழுக்காக ஆதரிக்கப்படும் புலவர்கள் தமிழுக்கே நன்மை செய்கிறார்கள். எவன் இலக்கியத்திற்குப் புதுச் செல்வத்தையும்மொழிக்குஒருபுதுத் தென்பையும் நல்குகிறானோ அவனைத் தேடித் துணை செய்யும் புரவலன் புகழுலகில் அழியாப புகழ் பெறுகிறான்.

ஜயங்கொண்டான், கம்பன், ஒட்டக் கூத்தன், புகழேந்தி ஆகிய இந்தப் புலவர்களுக்குப் பிந்திய இந்த நான்கு நூற்றாண்டுகளில் குறிப்பிடக்கூடிய இலக்கியம் எதுவும் உண்டாகவில்லை. அனைத்துலக இலக்கியத்திற்குத் தமிழ்ஒன்றுகூடத் தன் பங்கிற்காகச் செலுத்த முடியாத நிலையில் இந்த இடைக்காலம் இருந்தது.



இயற்கையை ரஸித்து, அழகை அனுபவித்து. துன்பத்தோடு தானும் உருகி, இன்பத்தோடு இயைந்து கவிதை எழுதும் உண்மையான கவிஞர்கள் இந்தக் காலத்தில் உண்டாகவில்லை. கற்பனைகள் புராணத்தை அடிப்படையாகக்கொண்டே எழுந்தன.

ஒரு தலைவி இரவு நேரத்தில் காதலனைப் பிரிந்து வருந்துகிருள். விடியப் போகிற நேரம். கதிரவன் எழுகைக்குக் காத்திருக்கிருள். ஒவ்வொரு மணித் துளியும் அவளுக்கு ஒரு யுகமாகத் தெரிகிறது. அப்பொழுது அவள்: "கதிரவன் இன்னும் வந்த பாடில்லையே! அவனைக் கேது என்னும் பாம்பு பற்றிக்கொண்டதோ, அன்றி அவன் ஏறி வரும் தேர்க்கு அச்சு முறிந்ததோ? இடை வழியில் அவனது குதிரைகள் சண்டித்தனம் செய்து, கயிற்றை உருவிக்கொண்டு ஓடிப் போய்விட்னவோ?" என்று தோழியிடம் கேட்கிருள்.

அரவம் கரந்ததோ?
அச்சுமரம் இற்றுப்
புரவி கயிறுருவிப்
போச்சோ?—இரவிதான்
செத்தானே இல்லையோ?
தீவினையோ? பாங்கியெனக்
கெத்தால் விடியும் இரா!

இந்தப் பாடல் 'பாமரரஞ்சக'மாக இருக்கிறது. பொதுவாக மட்டமான பாட்டு என்று சொல்லிவிட முடியாது. ஆனல் இதில் உள்ள கற்பனைகள் இயற்கையறிவிலிருந்து துளிர்விடவில்லை. புராண அடிப்படையை ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. சூரியன் ஒற்றைச் சக்கரமுடையதேரில் ஏழு குதிரைகள் பூட்டிப் பவனி வருகிருன் என்பது சூரிய புராணம். 'தீவினையோ?' என்பது அனுவசியமானது, அர்த்தமற்றது! சங்க காலத்துப் புலவர்களின் கற்பனைகள் இயற்கையின் விரிவையும் நுணுக்கத்தையும் கண்டு அதன்மேல் எழுந்தன. இடைக் காலப்புலவர்கள் இயற்கையை மறந்தனர்.

'அம்'மென்ருல் ஐநூறும், 'இம்'மென்ருல் இருநூறும் பாடித் தள்ளுகின்ற 'இயந்திரப் புலவர்'களும், ஒரு சொல்லுக்குப் பன்னிரண்டு பொருள் கூறுகின்ற அகராதிப் பண்டிதர்களும், எதுகைக்கும் மோனைக்கும் அடிமையான இலக்கணப் புலவர்களும் இக்காலத்தில் மலிந்திருந்தனர். கருத்தும் சொல்லுகினற உள்ளுணர்வும் நீங்கி வெறும் சொல்லாட்டம் தலையெடுத்தது. யமகம், திரிபு முதலிய 'திருகல் வேலை'கள் உண்டாயின. 'இருப்பு' என்று பாட ஆரம்பித்த புலவன பருப்பு, செருப்பு என்று சொல்வதிலே கருத்தான்றுவானே தவிர பொருள் நயத்தைப்பற்றிக் கவலைப்படமாட்டான. நெடுநல்வாடைபோன்ற ஒருணர்வுப் பாக்களையோ, சிலப்பதிகாரம்போன்ற காவியச் சிற்பங்களையோ உண்டாக்கும் மனத் திட்பத்தை எந்தப் புலவனும் கொண்டிருக்கவில்லை. இந்த நான்கு நூற்ருண்டுகளும் தமிழ் இலக்கிய வரலாற்றில் மின்னி மிளிராதன. இக்காலத்தில் பலர் புலவராக, புரவலராக வாழ்ந்தும் புகழ் பெருது இருட்டில் மறைபவராயினர். ○



நீதி

—இளமைப்பித்தன்—

அன்று............!

அரண்மனையில் அமளி! அந்தப்புரத்தில் அழுகுரல்! அரசியின் உள்ளம் கொந்தளித்துச் சோக அலைகளை வாரி எறிந்தது. பெற்றமனம் அல்லவா? சொல்லில் அடைபடாத சோகம், நெஞ்சையடைக்கும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டது! பத்துமாதச் 'சுமை'யைத் தாங்கிய வயிற்றில் மன்னன் பாலைவார்க்க மாட்டானா என்ற ஏக்கம் கலந்த பரிதாபமான கண்கள், இமைவட்டத்திற்குள் சிவந்து மிரளுகின்றன!

மனுநீதிச் சோழன் பெரிய சிவபக்தன! சொன்னசொல் மாறாத செம்மல். பழுத்த சைவன். சைவசமயக்கொள்கைகளில் தீவிரமான பற்றுடையவன்! 'ஒரேமகன்' என்ற ஆசை அவனுடைய மனத்திலும் இருக்கத்தான் செய்தது!

என்ன பண்ணுவது? நீதி என்று ஒன்றிருக்கிறதே! அதை மறைக்க முடியுமா? சோர்வுறும் மனத்தின் எந்த மூலையிலிருந்தோ ஓர்குரல் "நேர்மையாக நடந்துகொள்" என்று ஓலமிட்டுக் கொண்டல்லவா இருக்கிறது! கடமையைச் செய்யத்தவறினால் செங்கோலின்மீது மாசுபடர்ந்து, ஒளியை மங்கவைத்துவிடுமே!

"என்ன செய்வது?"

பட்டத்தரசி கைகளை முறுக்கிப் பிழிந்து கொண்டே கேட்டாள். ஆபத்திலிருந்து மகனைக் காப்பாற்றிவிட வேண்டுமென்கிற நப்பாசை அவளுக்கு!

மன்னன் மறுமொழி கொடுக்கவில்லை. அவனுடைய மனத்திலும் அதே கேள்வி தான் எழுந்துநின்றது!

"என்ன செய்வது?"

பிரச்சினை, பனிமலையைப் போல், எல்லைக்குக் கட்டுப்படாதது! அதைச் சாதாரண மனித அறிவால் அளவிடத் தெம்பும் திராணியும் வேண்டுமே! அலைமேல் அலையாகக் கிளம்பி மன்னனின் மனத்தைக் குழப்புகின்றன!

நீதி — நேர்மை.........இவையெல்லாம் கடந்து நிற்கிறது கடமை! சூடுபட்ட பனிக்கட்டியைப் போல, மனத்தில் ஒரு விதத் தளர்ச்சி. விடிந்தால் வழக்கு மன்றத்தில், தீர்ப்புச் சொல்லியாக வேண்டும்! குற்றவாளி — சோழபரம்பரையின் கடைசித்தளிர்! அதைக் கருகச் செய்வதா?

“நேர்மையாக நடந்துகொள்”

மீண்டும் மீண்டும் மனக்குகையில் எதிரொலி கிளம்பிய வண்ணமாகவே இருக்கிறது!

என்ன செய்வது?

மன்னனின் மனத்திரையில் காலையில் கண்கள் கண்ட காட்சி அசைக்க முடியாத— அழிக்க முடியாத--ஓவியமாகத் தோன்றுகிறது!

அரச வீதியில்......

தேர் உருளைகளின் கீழ் இரத்த வெள்ளத்தில் தோய்ந்து கிடந்த கன்று— அதன் அருகில் வீதிவிடங்கன்- அரசனின் ஒரேமகன்! கலவரத்தின் நிழல்படிந்த முகம்! கதறிக் கதறியழும் காராம் பசுவின் துயரப் பெருங் குரல்!

எத்தனையோ ஆண்டுகளாக அடிக்கப் படாத 'ஆராய்ச்சி மணி'யின் அகண்டாகாரமான பேரொலி! அதன்கீழ், நீதியை வேண்டும் கன்றிழந்த பசு! கண்ணீரும் கம்பலையுமாக- சோகத்தின் சின்னமாக—தறி கெட்டுச் சுற்றி வந்து, கொம்புகளால் மணியை முட்டி அசைக்கிறது!

“ஆமாம் நீதி வேண்டும்!”

சிறையில், இளவரசன்! அவன் பிறந்த பொழுது பெரிய பெரிய சோதிடர்களால் சிவத்தொண்டர்களால், 'நீடூழிகாலம் வாழவேண்டும்' என்ற ஆசீர்வாதத்தைப் பெற்றவன், ஒவ்வொரு கணமும் உடலிடம், உயிர் வெளியே போக அனுமதி கேட்டுக் கொண்டிருக்கிறது! இருட்டோடு இருட்டாய் ஒன்றிப் போயிருக்கிறான். சாவை ஏமாற்ற முடியுமா?

சீறிச்சீறிப் பாய்ந்தோடும் பெருமூச்சுகள் அந்தகாரத்தை, அமைதியைக்-கிழித்தெறிந்துகொண்டிருக்கின்றன.

விடிகிறது!

மன்னன் — ஆலோசனைக்காரர்களை—சிக்கலான வழக்குகளைச் சிந்தித்தறிந்து முடிவு கூறும் செம்மல்களைக் கலந்து தீர்ப்புக் கூறினான்! நீதியின் நிழலிலே அமர்ந்து தீர்ப்புக் கூறினான். நியாயத்தை உணர்ந்து தீர்ப்புக் கூறினான். மனக்குரலின் விருப்பத்தை நிறைவேற்றினான்!

“நேர்மையாக நடந்துகொண்டான்”

கொலை நடந்த இடத்தில் திரும்பவும் ஒரு கொலை! பசுங்கன்றின் இரத்தக்கறை படிந்த இடத்தில், மீண்டும் மனித இரத்தம்! தேர் உருளை, வீதிவிடங்கனின் உடல்மேல் ஏறி இறங்கி விட்டது!

மண்மீது மன்னனின் மகன் பிணமாகிக் கிடக்கிறான்!

சோழனின் மனத்தில் அமைதி—சுடுகாட்டு அமைதி!

செங்கோலில் படியவிருந்த மாசுமறைந் தொழிந்து விட்

டது. வம்சத்தின் புகழுக்கு ஒரு புதிய சுடரைக் கொளுத்தி விட்டான. மணிமுடியில் கூட ஓர்விதப் புதுச் சொலிப்பு ரேகை பாய்ச்சுகிறது.

அரண்மனையில் மகனைப் பிரிந்த தாயின் தீனமான குரல், கன்றையிழந்த பசுவின் குரலைவிட ஒருபடி மேலே உயர்ந்து கேட்கிறது! சுமையைச் சிவன்மீது போட்டுவிட்டுக் காரியத்தை - கடமையை - நிறைவேற்றிவிட்டுத் திரும்பி வந்த மன்னன் சிரிக்கிறான்! அழுகையும், சிரிப்பும் மாறி மாறித் தொனிக்கின்றன.

ஃ

காலத்தின் வாய், ஆண்டுகளை ஒவ்வொன்றாய் விழுங்கிக் கொண்டே வருகிறது! ஏதோ வெளியில் எஞ்சிநின்ற ஓர் ஆண்டில்.........உற்சவ நாட்கள் வெகு விமரிசையாக நடைபெறுகின்றன! மன்னன் தன் வயசு முதிர்ச்சியையும், உடல் தளர்ச்சியையும் பொருட்படுத்தாது, முன்னின்று நடத்துகிறான்!

அன்று இரத உற்சவம்! ஆயிரக் கணக்கில், எண்ணில் வராத கூட்டம்!

மன்னனுக்குப் பழைய நினைவுகள் திரும்புகின்றன. அன்றும்......... இப்படித்தான்...... திரளான கூட்டம்.........தேர் உருளைகளின்'கட கடச்' சத்தம் கண்கள் குளமாகின்றன! மறைந்த மகனின் மங்கிய தோற்றம் மின் வெட்டுகிறது.

தேரின்மேல் தேவனின் சிலை.

வீதிகளில் பிரமாண்டமாக உருண்டுவருகிறது தேர்!

திடீரென்று பெருத்தகூக் குரல்!

மன்னன் மருண்டு, ஓடிப் போய்ப் பார்க்கிறான்! பெரிய உருளைகளின் கீழ் நசுக்குண்டு உருத் தெரியாமல் கிடக்கிறது ஓர் பாட்டாளியின் கூழான உடல்! தேர் அசையாமல் நிற்கிறது! தேவனுடைய சிலைக் கருகில் உட்கார்ந்திருந்த குருக்கள் பதற்றத்துடன் குனிந்து நிற்கிறார்!

மன்னன் நிமிர்ந்துபார்க்கிறான்!

தேவன் இரண்டுமே செய்யவில்லை!

மௌனத் திலாழ்ந்திருக்கிறது சிலை!

கிழட்டுச் சோழனின் மனதில், நெடுநாட்களுக்கு முன்னால் ஒலித்த அந்தக் குரல்... கரகரக்கிறது!'

"நேர்மையாக நடந்துகொள்"

செத்தவன் ஏழை! சாகடித்தவன்?

குற்றவாளியார்? தேவன்!

தேவனோ, சிலையாகிவிட்டான்! சிலை பேசாது!

"பேசத் தெரியாத பசுவுக்கு நீதி வழங்கிய நீ, இதற்கும் நீதி வழங்கத்தான் வேண்டும்" என்று இடித்துக் கூறுகிறது உள் மனம்!

மறு நாள்......

வழக்கு மன்றம் கூடுகிறது! தீர்ப்பளிக்கும் திருச் சபையினர் 'திகில்' பிடித்துப்போயிருக்கின்றனர்! மன்னனின் போக்குப்புதுமை கலந்த விசித்திரமாக இருக்கிறது!

"குற்றவாளியோ தேவாதி தேவன். ஏறிநிற்க வேண்டிய இடமோ கைதிக்கூண்டு!" கூடியிருப்போரின் உள்ளங்கள் துடிதுடித்துக் கொண்டிருக்கின்றன!

மன்னன் மிடுக்காக நடந்து வந்து மன்றத்திலே உட்காருகிறான். முகம் கனன்றுகொண்டிருக்கும் தணல் மாதிரி இருக்கிறது!

"ஒரு வேளை மன்னனுக்குப் புத்தி பிசகிவிட்டதோ" என்று எல்லோரும் சந்தேகிக்கின்றனர்! விசாரணை நடைபெறுகிறது! குற்றவாளி கோயிலுக்குள் இருக்கிறார்!

என்ன செய்வது?

"சட்டம், நீதி, நியாயம், கடமை.........எல்லாம் மனிதனுக்குத்தானே தவிர, தேவனுக்கில்லை "என்று எல்லோரும் சொல்லிவிட்டார்கள்!

"இதற்கு என்ன செய்வது?"

மன்னன் துடித்துக்கொண்டு கேட்டான்! பதிலுக்குப் பதில் செய்யவேண்டுமென்ற அவனுடைய எண்ணம் புகைந்து போய்விட்டது! தொங்கும் புருவங்களின் கீழேயிருந்து சரிகின்றன இரண்டு கண்ணீர்க் கோடுகள்.

"பிராயச்சித்தம் செய்யலாம்" என்ற முடிவுக்கு வந்தார்கள்!

அதுகூட உடனே நிறைவேறிவிட்டது!

புண்ணிய தீர்த்தத்தால், சிலையைக் கழுவினார்கள்! தேவனைத் தூய்மைப்படுத்தினார்கள்!

மன்னனின் ஒடிந்துபோன மனத்திலிருந்து தெறித்து விழுந்த சில் ஒன்று "இப்படித் தெரிந்திருந்தால், வீதிவிடங்கனையும் புண்ணிய தீர்த்தத்தால் நீராட்டி இருக்கலாமே!" என்று முனகுகிறது! எங்கிருந்தோ ஓர் பெருஞ் சிரிப்பின ஏளனமான எதிரொலி!

ஒரு வேளை பனிமலையில் வாழும் தேவன், தன்னுடன் போட்டி போடவந்த மனிதன் தோற்றுப் போய் விட்டானென்று எண்ணிச் சிரித்த சிரிப்போ, என்னவோ, அது எனக்குத் தெரியாது! ○



பாரதிதாசன் பரம்பரை

வாய் முத்தா சிந்திப் போகும்?

தொழிலாளர் பொதுவுடமை ஆட்சிகாணத்
தொல்லைபல தாம்பொறுத்தும் தொடர்ச்சியாக
வழிதோறும் கிளர்ச்சிசெய்து வருதல்போல், நான்
வரும்இடர்கள் பலதாண்டி இன்றெவ்வாறே,
எழிலேஓர் வடிவாகி இருக்கும் உன்பால்
எய்தி, எனதாசையெலாம் எடுத்துரைத்தேன்;
அழுவாரைத் தேற்று(ம்) நல்லார்போல், ஓர்வாய்ச்சொல்
அழித்தால், உன்வாய்முத்தா சிந்திப்போகும்?

வாயாத பேரழகு வாய்ந்த உன்னை
மறவாத என் தமிழுக் கிடோய் எண்ணி
மாயாத பெருங்காதல் உன்பால் கொண்டேன்;
மறையாதென் மனத்துயர்; உன்மொழி கேளாமல்!
ஓயாமல் ஆய்ந்து முண்மை காணார்போல், நான்
ஒழியாமல் அடுத்தடுத்தே மாறிவந்தேன்!
சாயாத மலர்க்கொடியே! உன்வாயின்சொல்
தந்தாலுன் வாய்முத்தா சிந்திப்போகும்?

செல்வர்மனை சென்று தெருக் கடையில்நின்று
"சிறுபிச்சை" எடுப்பவரைக் காக்கவைத்துப்
பல்வகையும் வருத்துகிற பணக்காரர்போல்
பைந்தமிழின் முகம்படைத்த பாவைநீயும்
வல்வினையேனைக் காக்க வைத்து வாட்டல்
வழக்கலவே! மகிழ்ந்தருள்வாய்; "ஊம்!" என்றோர்
நல்வழியில் நானுய்ய நயந் திச்சொல் நீ [சொல்;
நல்கிடின் உன்வாய்முத்தா சிந்திப்போகும்?

கவிஞர் மாவண்ண தேவராசன் திருவத்தி புரத்தைச் சேர்ந்தவர். இவர்தம் இசைப் பாடல்கள் கருத்துக்கினிய தமிழ்விருந்து. 'வாய்முத்தா சிந்திப்போகும்' என்ற இவ் வினிய பாடல் அவர் வரைந்தது.

— ஆசிரியர்.



பேராசிரியர் மறைமலையடிகள் 10-4-49 மாலை சென்னையில் தமிழ்மொழியின் தனிச்சிறப்பு என்ற தலைப்பில் விரிவுரை நிகழ்த்தினார்கள். அப்பொழுது கேட்ட — சுவை மிக்க செய்திகளில் இதுவும் ஒன்று. —

இதுதான் தமிழ்!

பல ஆண்டுகட்கு முன்னர் இது நடந்தது. அப்பொழுது சென்னையில் பல பேரறிஞர்கள் இருந்தார்கள். பூண்டி அரங்கநாத முதலியார், சேலம் இராமசாமி முதலியார், தண்டலம் பாலசுந்தர முதலியார் மூவரும் சென்னையில் சிறப்புற்று விளங்கிய காலம்.

பூண்டி அரங்கநாதர் நல்ல படிப்பாளி. தமிழ் மொழியை ஆழ்ந்து கற்றுப் பெரும் புலமை எய்தியவர். கவிதை இயற்றும் ஆற்றல் உடையவர். எனக்கு மிகவும் வேண்டிய நண்பர்களில் ஒருவர்.

சேலம் இராமசாமி முதலியார் சென்னையிலேயே வழக்குரைஞர் தொழில் நடத்தி வந்தவர். அந்தக் காலத்து வக்கீல்களிலே மிகவும் திறமையானவர் என்று போற்றப் பட்டவர். ஆங்கிலத்துடன் அருந்தமிழ் நூல்களையும் கற்றுணர்ந்த அறிஞர்.

தண்டலம் பாலசுந்தர முதலியார் அரசாங்கத் தலைமை மொழி பெயர்ப்பாளர் (*Chief Tamil Translator*) அவரும் நன்றாகத் தமிழும் ஆங்கிலமும் கற்ற அறிஞர்.

இவர்கள் மூவரும் சிறந்த அறிஞர்கள் மட்டுமல்ல, நல்ல செல்வாக்கும் உடையவர்கள்.

அப்பொழுது வடநாட்டிலிருந்து சென்னைக்கு ஒரு வடமொழிப் புலவர் வந்தார். வடமொழியில் பெரும் புலமை உடையவர். பல நாடுகளையும் சுற்றிவருபவர். பலமொழிகள் வழங்கும் இடங்கட்கெல்லாஞ் சென்றவர். அவர் தாம் செல்லும் நாடுகளிலுள்ள அறிஞர்களைக் கூட்டி அவர்கள் மொழியில் ஏதாவது ஒரு பாடலைப் பாடச்சொல்வார். பின்னர் அதே ஒலிக்கு இயைந்த வட சொற்களை அமைத்து அதே ஒலியுடன் தாம் இயற்றிய வடமொழிப் பாடல்களைப்பாடிப் பொருள் விளக்குவார். அதே ஒலியை வைத்துக்கொண்டு அதைப் போலவே வடசொற்களை அமைத்துப் பாடியதால் அவரைப் பலரும் வியந்தனர்.

இவ்வாறு வடநாடு முழுமையும் வெற்றிக்கொடி நாட்டி வடமொழியில் எல்லா மொழியையும அமைத்து விடலாம், அவ்வொலிகள் எல்லாம் வடமொழியில் உள்ளன என்று காட்டிப் பெருஞ்சிறப்புப் பெற்றார். பலமொழிவாணர்களும் அவருடைய புலமையையும் வடமொழியின் சிறப்பையும் புகழ்ந்தனர்.

அவர் சென்னைக்கும்வந்தார். பூண்டி அரங்கநாதரைக் கண்டு

தம் காரியத்தைச் சொன்னர். 'எந்த மொழியில் யார் பாடினு லும் தான் அதேபோல் பாடு வேன்' என்ருர். அரங்கநாதர் வியந்தார். 'எந்த மொழியானு லும் முடியுமா?' என்ருர். 'முடி யும். பாடிக் காட்டுகின்றேன்' என்ருர் அவர்.

உடனே தக்க அறிஞர்கள் கொண்ட ஓர் அவை கூட்டப் பெற்றது. பல அறிஞர்கள் வந்திருந்தனர். மலையாளம், தெலுங்கு, கன்னட மொழிப் புலவர்களும் வந்திருந்தனர். தண்டலம் பாலசுந்தர முதலி யார், சேலம் இராமசாமி முதலி யார், பூண்டி அரங்கநாதர் மூவ ரும் ஒரு பக்கத்தில் அமர்ந்த னர். நிகழ்ச்சி தொடங்கிற்று.

மலையாளம், தெலுங்கு, கன்னடம் முதலிய மொழித்துறை அறிஞர்கள ஒவ்வொரு பாவாகச் சொன்னுர்கள். வட மொழிப் புலவர் அதற்கிணை யப் பாடினுர். பொருள் விரித் துரைத்தார். வடமொழிச் சுலோகங்களும் சற்றும் ஒலி மாறுபடாது விளங்கின. வட மொழியின் திறத்தைக் கூடி யிருந்தவர் புகழத் தொடங்கி விட்டனர். பூண்டி அரங்கநாதர் கூடப் பயந்து விட்டார். மெது வாகப் பக்கத்திலிருந்த பால சுந்தர முதலியாரிடம் 'இவரி டம் நம் தமிழ் நடக்குமா?' என்று சந்தேகக் குரலில் கேட் டார். அவரோ ஆழ்ந்த சிந்த னையில் இருந்தவர் 'பொறுங் கள். என்னதான் நடக்கிற தென்று பார்ப்போமே!' என்று கூறிவிட்டு மீண்டும் சிந்தனை யில் ஆழ்ந்து விட்டார்.

தமிழில் சொல்ல வேண்டிய நேரமும் வந்தது.

"எந்தப் பாட்டா யிருந்தா லும் சொல்லி விடுவீர்களல் லவா?" என்ருர் பாலசுந்தர முதலியார்.

"ஓ அதற்கென்ன சந்தே கம்! நீங்கள் தான் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே!" என்று வெற்றிக்களை விளங்கக் கம்பீரமாகச் சொல்லித் தம் கம்பீரத்தைப் பலரும் கண்டு வியக்கின்ருர்களா என்று ஒரு முறை அவையினரைச் சுற்றிக் கண்ணுல் பார்த்துக்கொண் டார் வடமொழிப் புலவர்.

பாலசுந்தரனுர் பாடத் தொடங்கினுர்.

'விழியால் பிணையாம் விளங்கிய லான்'... என்று தொடங்கினுர். வடமொழிவாணர் கம்பீரத் தோற்றம் மாறியது. சிந்தனை செய்யத்தொடங்கி விட்டார்.

'விழியால் பிணையாம் விளங்கிய லான் மயிலாம் மிழற்று மொழி யாற் கிளியாம்......'என்ருர் பால சுந்தர முதலியார். வடமொழி வாணர் கை கன்னத்தைத் தாங்கியது. முகத்தில் கவலை ரேகைகள் படர்ந்தன. அந்த ஒலிகளை அமைக்க முடியாமல் திணறுகின்ருர் என்பது முகத் தில் நன்ருகத் தெரியத் தொடங்கிற்று.

......'முதுவானவர் தம் முடித் தொகைகள் கழியாக் கழற்றில்லைக் கூத்தன் கயிலை முத்தம் மலைத்தேன் கொழியாத்திகழும் பொழிற்கெழிலா மேந்துல தெய்வமே' என்று பாட்டை முடித்தார்.

அவையினர் வடமொழி வாணர் முகத்தையும் பாலசுந் தரனுர் முகத்தையும் மாறி மாறிப் பார்த்தனர். பூண்டி அரங்கநாதருக்கும் சேலம் இராமசாமி முதலியாருக்கும் ஒரே மகிழ்ச்சி.

வடமொழியாளரின் கண்கள் கலங்கின. வியப்பும் தோல்வி யும் இயலாமையும் அவர்

மலர்ப் பயணம்

மகிழ்வுடன் நான் பெற்ற பொன்னி மலர், அப்பொழுதே தெரிந்த நண்பரிடமிருந்து துவங்கிய பயணத்தைத் தெரியாத நண்பர்களிடமெலாம் சென்று முடித்துக்கொண்டு இப்பொழுதுதான் என்னிடமே திரும்பியது. நான் பெற்ற மலர் மட்டுமல்ல, எவர் பெற்ற மலரும், குடந்தையில் இதுபோல் நீண்டபயணம் புரியவேநேர்ந்தது......... பொன்னி பொங்கல் மலர், ஒவ்வொரு பிரதியையும் எவ்வளவு-எவ்வளவு பேர் படிப்பது!... மலரைக் கையிலேதான்பெறுகிருர்கள், முகத்திலே புன்னகை பிறக்கிறது. பொன்னி மலர், கவலை இருப்பவரிடம் களிப்பையூட்டுகிறது; களிப்பு இருப்பவரிடம் அதைப் பெருக்குகிறது; படித்தால்மட்டுமா, அதிலே பயன்பெறமுடிகிறது? பார்த்தாலே,அதில் பரவசம்கிடைக்கிறது!ஒருமுறைபடித்து,ஒதுக்கிவிட என்ருலோ, உள்ளம் துடிக்கிறது; பலமுறை படித்தாலோ புதுப்புதுபொருள்கள் இன்பம்-பூக்கிறது!... மலரில் வந்துள்ள, கதைகள் கவிதைகள் கட்டுரைகள் எல்லாமே உள்ளத்தை அள்ளுவன...... சித்திரங்களோ பார்வையைச் சிறைபிடிக்கின்றன.பொன்னியின் சிறப்பென்னவென்ருல், அது நல்ல நல்ல கவிதைகள் கட்டுரைகள், கதைகள் பிறக்கும் இடம்மட்டுமல்ல. நல்ல நல்ல கவிஞர்கள், கட்டுரையாளர்கள், சிறுகதை எழுத்தாளர்கள் பிறக்கும் இடமாகவும் இருக்கிறது. ....

குடந்தை } அன்பன்
2-5-49 } நா. பாண்டுரங்கன்

முகத்தில் காணப்பட்டன. மயங்கினுர். 'கொஞ்சம்நிறுத்திமெதுவாக மீண்டுமொருமுறைசொல்லுங்கள்' என்று வேண்டினுர்.

"விழியார் பிணையாம்" என்று ஒவ்வொரு சொல்லாக 'ழகரம்'வருமிடங்களிலெல்லாம் சற்று அழுத்தமாகவே பாட்டை மீண்டுமொருமுறை சொன்னுர் பாலசுந்தரனுர்.

அவர் தலைகவிழ்ந்தது. "இதுவரை இத்தகைய ஒலியை நான் கேட்டதேயில்லையே! எங்கள் சமஸ்கிருதத்தில் இல்லாத சிறப்பு ஒலியல்லவா அது. அந்த ஒலியை வடமொழியில் என்னுல் அமைக்க முடியவில்லை. இதுவரை எத்தனையோ மொழிவாணரையெல்லாம் வென்றேன். எங்குமே கேட்டதில்லையே!" என்று சோகங்கலந்த குரலில் அவர் கூறினுர்.

"இதுதான் தமிழ்" என்று மகிழ்ச்சியுடன் சொன்னுர் அரங்கநாதர். வடமொழியாளரும் தம் வெற்றிச்சிறப்பெல்லாம் மறைந்துவிட மௌனமாகச் சென்றுர்.

"இது எப்படி உங்கள் நினைவுக்கு வந்தது? இத்தனை 'ழகரம்' வருகின்ற திருக்கோவையார் பாட்டைச் சரியான சமயத்தில் பாடினீர்கள்" என்று பாலசுந்தரனுரைச் சூழ்ந்துகொண்டு அனைவரும் பாராட்டினர்.

ழகரம் தமிழுக்குள்ள சிறப்பொலி. வடமொழியிற் கிடையாது.

இது கதையல்ல. உண்மையாகவே நடந்த செய்தி. தண்டலம் பாலசுந்தர முதலியாரே என்னிடம் நேரில் சொல்லியிருக்கிருர்.

——கலிங்கன்

உயர்ந்த உல்லாசம் அவர்கட்கு

6. பொங்கல் புது விருந்து

நாளை விடிந்தால் பொங்கல். ஒவ்வொரு இல்லமும் புது ஒளியுடன் திகழும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த நாடோடியின பிரவேசம் ஒருதடையாக இருக்க முடியாதென நான் கருதுகிறேன்.

பொங்கலுக்கும் பொருமலுக்கும் சம்பந்தம அதிகமன்று. ஆனல் பொங்குவதற்குள், பொங்க அழும் மங்கையரில் 'நாட்டுப்புறம்' ஒரு கணக்கு ஏடாக பயன்பட்டால், எங்கள் பண்ணையிலே, அடங்கிக்கிடக்கும் அடிமைகளின் எண்ணிக்கையே அதிகமாகக் காணப்படும்.

நான்தான் 'இரண்டெழுத்து' எழுதப்படிக்கத் தெரிந்தவனயிற்றே' நான் அப்போது செய்வதெல்லாம் மேற்பூச்சுத்தான. ஆனல் என் உள்ளம் ஒரு எரிமலை. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி, எங்கி, அந்தகார இருளில் வதங்கிச் செத்து மடிந்து கொண்டிருக்கும் என் உள்ளத்திற்கு ஆறுதலாகக் காட்சியளிப்பது அந்த அபாக்கியர்களான அடிமைகள் தாம். இந்த 'நந்தனர்' களை எல்லாம் 'கிந்தனர்' களாக்க, நான் பட்ட கஷ்டம கொஞ்ச நஞ்சமல்ல. அதைத் தெளிவாக இன்னுமொரு சமயம் கூறுகிறேன். இப்போது, பொங்கலுக்காக ஒருமங்கை, எங்ஙனம் சிதைக்கப் பட்டாள் என்பதை எடுத்துக் காட்டுகிறேன்.

ஒருநாள. அன்று எனக்கு வேலை கொஞ்சம் கடினம. சூரியனேடு எழுந்து, காளவாசல் சென்று, திங்களோடு தான் வீடுதிரும்பினேன். சுண்ணும்பு படிபோட்டதின் விளைவாக உடம்பெல்லாம் ஒரே நமைச்சல். எங்கள் பண்ணையார் ஒரு வீடுகட்டினர். அதற்குச் சாமன்கள் சேகரம் செய்யும் பொறுப்பையும் என்னிடமே விட்டுவிட்டார், அந்த ஏதுமறியாதவர். நான் தான் சுண்ணும்பு முதல் சுட்ட செங்கல் வரை வாங்கிவர வேண்டும். அன்றுடக்கூலியை வேலையாட்களுக்குப் பகிர்ந்து கொடுப்பவனும் நான் தான். அன்று இரவு ஏழுமணிக்கே தூக்கம் என்னைக் கௌவியது. அயர்ந்து மொட்டை மாடியில் தூங்கி விட்டேன்.

யாரோ என்னை எழுப்புவது போல் தோன்றிற்று. மெதுவாகக் கண்களைத் திறந்தேன். மங்கிய நிலவொளியில் ஒருமங்கிய உருவம். பெண்தான். கண்களைக் கசக்கிவிட்டு நன்ருக உற்றுப் பார்த்தேன். என் கண்களை என்னல் நம்ப முடியவில்லை. யாரது ......அஞ்சலையா? ......என்னை இத்தனை நாளும் ஏய்த்துவந்த அஞ்சலை தானு? ......எங்கே இன்னுமொருமுறை நன்ருகப் பார்த்துக் கொள்கிறேன். ஆம். அஞ்சலை தான்! என் வலையில் சிக்காமல் தப்பிய அந்த ஒரே மாடப்புறு தான்.........

"எங்கே இந்நேரம்?' என்றேன்.

''நாளை விடிந்தால் மாசப் பொறப்பு. தைப்பொங்கல்''—— அவள் வார்த்தைகளை விழுங்கினுள். அப்புறம் அவள் உதடுகள் அசையவே இல்லை. கண்கள் அக்காரியத்தை மேற்கொண்டு விட்டன.

நான் அவளையே அசையாமல் பார்த்துக் கொண்டே இருந்தேன். அவளால் என்னுடைய காமக் கண்களிலிருந்து வெடித்துக் கிளம்பும் கூரியபார்வைப்பொறிகளைத் தாங்கமுடியவில்லை. தலையைக் கவிழ்த்துக் கொண்டாள். சிறிது நேரம் அமைதி! அவள் உள்ளம் பேசத் துடிக்கிறது. ஆனால் நாவு மறுக்கிறது. நானே காம வெறி கொண்ட ஒரு மிருகம். வேளையோ நடுஇரவு. அந்நேரம் அழகிய மங்கையுடன் தனியே இருப்பதென்றால்...... மேலும் நான் அதிகமாகச் சோதிக்க விரும்பவில்லை. எவ்வளவு இச்சை கொண்ட போதும் விருப்பத்திற்கு மாருக எதையும் நான் செய்வதில்லை. ஆகவே மறுபடியும் நான் பேச்சைத் துவக்கினேன்,

''இன்றைக்கு எவ்வளவுகூலி வாங்கினுய்?''

''அரை ரூபாயும் மூனுதுட்டும்......எங்க அத்தான் மதுரைவீரசாமியை உங்களுக்குத் தெரியுமே, அவரு......''

''அஞ்சலை! அதெல்லாம் எனக்குத் தெரியாது. இப்ப என்ன சொல்றே..........''

''நாளைக்கு எல்லா வீட்டிலேயும் பொங்குறப்போ, நான் மட்டும் கூழைக் கரைச்சிக் குடிக்கவா? உங்களுக்கு எம்மேலே பிரியமில்லையா?''

''அதுக்குத்தான், நான் உன்னை அன்னிக்கே ......''

''சரி, உங்க இஷ்டம். எனக்கும் உங்கமேலே ஆசை தான். ஆனால் இந்தபபாழும் கயிறு............''

''சிறிது நேரம் வேண்டுமானால் கழட்டி வைத்துவிடு''—— என்ன நெஞ்சழுத்தம் இருந்தால் நான் இவ்வாறு கூறியிருக்கமுடியும?

அவள் தலையிலே அன்றலர்ந்த மல்லிகைப்பூ சூடியிருந்தாள். அதன்மணம் என்னைக் கவர்ந்தது. இருவரும் சற்றுநேரம் அப்படியே இன்பத்தில் திளைத்திருந்தோம். மல்லிகைப்பூ கசங்கி, கிழே விழுந்து விட்டது. நான் என் பைக்குள் கையைத்துழாவினேன். இரண்டு அரைரூபாயும் ஒருகால் ரூபாயும், மூனறு அணுக்களும அகப்பட்டன. அப்படியே அவள் கையில் கொடுத்தேன். அவள் முகத்தில் எவ்வளவு மலர்ச்சி! எத்தனை மகிழ்ச்சி! ஆனல், கசங்கிய மல்லிகை மறுபடியும் மணம வீச முடியுமா?

மணி ஒன்றடித்தது. கடந்த நேர இன்பத்தை எண்ணி லாகிரியில் மூழ்கியிருந்த எனக்குத் தூக்கம் வரவில்லை. கட்டிலில் உட்கார்ந்து கொண்டே கொஞ்சம் புகைப்பிடிக்கலாமென்று, தீக்குச்சியைப் பொருத்தினேன். என் உள்ளம் திடுக்கிட்டுப் போய் விட்டது. என்உடல் பதறியது. இந்நேரம் இவர்கள் இங்கு...... அஞ்சலை வந்து போனதை இவர்களும்..............

''யார் வேலனு?'' — (என் அப்போதையபெயர் வேலன்)பேசாமல் எழுந்துநின்றேன். வந்தது வேறு யாருமல்ல. என்னுடைய எஜமானி யம்மாள் தான்.

கண்ணிலே பீழை வழிய, அதோ அறைக்குள் தலையணையை அணைத்துப்படுத்துக் கிடப்பவர் தான் எங்கள் பர்த்ருஹரி. அந்த அறுபது வயதுக்காளை, அம்மையாரை இருபது வயதுக்கிழவியாகக் கருதியதன் பயனாக ஏற்பட்ட விளைவுதான் வேலனை மிரட்ட, அம்மையார் ஆரம்பித்த பீடிகை என்பது, பெண்கள் விஷயத்தில் வயிரம்பாய்ந்த எனக்கு நன்றாகத் தெரியும். ஆனால் 'இம்' என்னுமுன்னே, 'ஏற்றுக்கொள் தாயே' என்று கொஞ்சி மன்மதபிச்சை கேட்ட நான், அம்மா ஐநூறும் ஆயிரமும் தருவேனென்று சொல்லியும் அசையவில்லை. காரணம்? கொழுந்து விட்டு எரிந்தால் தானே, கொத்தும் கிளிப்பிள்ளை போல் என்னைத் தொத்தும அம்மையை நான் தொடமுடியும்?

"அஞ்சலைக்கு இங்கே என்ன வேலை........"

"கொஞ்சம் பணம் வேண்டுமென்றாள்........."

"பணம் கேட்க இதுதான் சமயமோ?"

"களங்கமற்ற உள்ளம்.காலம் தடைப்படுத்த முடியாது"

"இதற்குத்தான் எஜமான் புதுவீடு கட்டுகிறாரோ?"

"ஏதோ தெரியாமல்......"

"அந்தப்புத்தி முதலிலேயே இருக்கவேண்டும். இருந்தாலும், வேலா, நீ கொஞ்சம் கெட்டிக்காரன். நான் ஒருத்தி இங்கே இருக்கிறேன் என்ற எண்ணமே, உனக்கில்லையே"

"எனக்குத் தெரியும்"

"தெரிந்துமா துணிந்து செய்தாய்?"

"இல்லைதாயே தங்களின் முன்.........நான் கூலிக்காரன்"

"ஏன் விலகிப்போகிருய்? வேலா! நீ எல்லோரிடமும் சீர்திருத்தம்பேசுகிருய். என்னிடம் மட்டும் ஏன் இவ்வளவு வெறுப்பு! நானகவே உனக்குத் தரும் முத்தம் பிடிக்கவில்லையா? இஷ்டமில்லையானல் என்னிடம் திருப்பிக் கொடுத்துவிடு. இதில் ஏன் தயக்கம்? நீ இன்னும்......"

"பயப்படுகிறேன். மேலும் நாளை பொங்கல்......"

"அதற்கென்ன?"

"காலையில் நான் அஞ்சலைக்கு........."

"ஆயிரம் வேண்டுமானலும் கொடு. கழியும் இரவை விணுய்க்........."

"பணம் கொடுப்பதாக வாக்களித்துள்ளேன்"

"இதோ பெட்டிசாவி. எவ்வளவு தேவை. உன்நிறையளவு பணம் வேண்டுமா?......"

"பேசவிட மாட்டீர்களா? சிறிது நேரம் பேசிமுடித்துக் கொள்வோமே! என்மூச்சுத் திணறும்படியாக......"

"இதோபார் வேலா, நாளை எஜமான் மூலமாக, உனக்குப் பொங்கல் இனும் ரூ100. அஞ்சலைக்கு இரண்டு சேலை— போதுமா?...... இன்னும் ஏதாவது........."

"ஒரே ஒருவேண்டுகோள்"

"எனக்குக் கட்டளையிடலாம்"

"நான் வெளியேபோக அனுமதி தருவீர்களா?"

"வேலா, விளையாடுகிருயா? சரி. உன்னிஷ்டம். நீ போவதை என்னல் தடுக்க முடியுமா? பருவப்பெண்களின் கதி இப்படியா பாழாய்ப் போக வேண்டும்?"

"அழாதே கண்ணே! உன்னை அதிகமாய் வாட்டிவிட்டேன். மன்னித்துக்கொள். இனி உனக்கே நான் முழுச் சொந்தம்"

இருள் கலைந்தது. நான் படுக்கையை விட்டு எழுந்து உட்கார முயன்றேன. முடியவில்லை. தலையணைமேல்சாய்ந்து கொண்டேன. என் கண்களைகண்டு சூரியன் நடுங்கினன். மறுபடியும் படுக்கையில் வீழ்ந்தேன். ஒருநாள் இரவில் எவ்வளவு அக்கிரமம்?

அஞ்சலையைக் காட்டி என் நெஞ்சலையைக் கவ்விக் கொண்டாள் அந்தப் பணக்காரி. கண்ணலையைவீசி என் கையலையைத்தன் பக்கம் இழுத்துக் கொண்டாள் அஞ்சலை. அஞ்சலை தாலிகட்டியவள் தான். தாலியிருந்தும் வேலிதாண்டி வருகிருள் பணத்துக்காக. அதே பணத்தைக்காட்டித் தினமும் என்னைப் பிணமாக்கி மகிழ்கிருள் பெரும் பணக்காரி. இந்நிலையில் நான்!

இத்தன்மை வாய்ந்த தனச்செல்வியும் அஞ்சலையும் இருவர்தான் என்று எண்ணிவிட வேண்டாம். உயர்குடிப் பிறந்தவர் என்று செருக்கி வாழ்வோரிடத்தும் சரி, ஏழைமக்களாய்ப் பிறந்து அடிமை வாழ்வு நடத்துவோரிடத்தும் சரி, "பணம்பேசுகிறது; காமம் வீசுகிறது" என்ற உண்மையை மட்டும மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இந்த உண்மை உலக்கு நன்மை பயப்பதாக இருக்கட்டும்.

வணக்கம்

வழிப்போக்கன்

மாணவர் மன்றம்

கேள்வி 5 விடைகள்.

நெ. திரு. தர்மலிங்கம்
4-ம் படிவம்
டான்பாஸ்கோ உயர்நிலைப் பள்ளி
வேலூர்
(பரிசு பெற்றவர்)
[வீட்டு முகவரி தருக]

'முதியோர் கல்வி'யில் மாணவர்கள் பங்கெடுத்துக் கொள்ளுதல் நாடு இன்றுள்ள நிலைமையில் மிகவும் இன்றியமையாதது. இப்போது விடப்பட்டுள்ள நீண்ட கோடை விடுமுறையில் மாணவர் ஒன்று சேர்ந்து ஓர் ஆசிரியரின் தலைமையில் கிராமங்களுக்குச் சென்று பணியாற்றுதலே சிறந்த முறை. தற்காலத்தில் கிராமங்களில் பெரும்பான்மை மூதியோர் கல்லாமலேயும், சிறுபான்மையோர் கற்றும் (அதாவது கையெழுத்திடத் தெரிந்தும்) இருக்கின்றனர். ஆனால் இவர் அனைவர்க்கும் அறிவுநிலை ஒன்றாகவே உள்ளது. முதியோர் வருங்காலக் குடிகளை வளர்ப்பவர்களாதலின் அவர்களுக்கு மூடநம்பிக்கை, அறியாமை முதலியன நீங்கிய நல்வாழ்வு கற்பிக்கப்பட வேண்டியது அவசியம். ஆதலின் மாணவர் பொதுவாகத் தங்கள் ஊரிலேயும், வசதிகள் அமைந்தால் வெளியூர் சென்றும் முதியோர் கல்வியில் மேற்கூறிய முறையில் பங்கு கொள்ளலாம்.

●

தி. திருவரங்கன்
6-ம் படிவம்
ம. தி. தா. இ. க. உயர்நிலைப் பள்ளி
திருநெல்வேலி

பழமைத் தீயால் கருக்கப்பட்ட உள்ளத்துடனும், தற்குறியாகம் வாழும், இந்த நாட்டின் முதியோர்களுக்கு மாணவர்கள், தங்களுடைய படிப்பைப் பாதிக்காத முறையில், ஒவ்வொரு நாளும் இரவில் பாடம் நடத்த வேண்டும். ஊருக்கொரு படிப்பகம் அல்லது ஒரு கழகம் நிறுவப்பெற்று, அங்கு கல்விபயில விரும்பும் முதியோர்களை உறுப்பினர்களாகச் சேர்த்து, மாணவர்களின் எண்ணிக்கைக்குகந்தபடி நாட்களைப் பகுத்துக் கொண்டு பாடம் நடத்த வேண்டும். எடுத்துக் காட்டாக, ஒரு ஊரில் பாடம் நடத்தத் தகுதியுள்ள பத்து மாணவர்கள் இருந்தால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு மாதத்தில் மூன்று நாட்கள் பாடம் எடுக்க வேண்டும். இதனால் மாணவர்களுக்கும் பலநாட்கள் ஓய்வு கிடைக்கிறது. விருப்புடன் பயிலும் முதியோர்களுக்கும் பல மாணவர்களின் அறிவுத் திறனையும் கல்வியையும் பெறமுடியும். முதியோர்களின் ஆதரவில் படிப்பகம் அல்லது கழகம் வளர்ச்சியடைய ஒரு வழி ஏற்படுகிறது. இம் முறையில் நாம் பங்கெடுப்போமாயின், முதியோர்கள் கட்டை விரலைப் புரட்ட வேண்டியதில்லை. பழமையில் வழுக்கி விழுந்தவர்களையும் கை தூக்கி விட்டவர்களாவோம்.

●

அரு. மதியழகன்
6-ம் படிவம்
சேதுபதி உயர்நிலைப்பள்ளி, மதுரை.

மாணவர்களாகிய நாம் நன்கு புலமை வாய்ந்த மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, பல குழுக்களை ஏற்படுத்தி, அந்தக் குழுக்கள் பல

இடங்களுக்குச் சென்று, அங்குள்ள எழுத்தறிவில்லாத முதியோர்கட்குத் தமிழ்மொழியைக் கற்றுக் கொடுக்கலாம். எழுத்தறிவுள்ள முதியோர்கட்குப் பல்வேறு நாடுகளைப் பற்றியும், முற்கால, தற்காலத்தமிழகத்தின் வரலாறு, நிலை, அறிவியல் முதலியவைகளைச்சொற்பொழிவுகள் வழியாக நிகழ்த்தலாம். அழகான பொருட்காட்சி சாலைகளை நிறுவி, அதில் உலகத்தில் தோன்றிய அறிஞர்களின் வரலாறு, புவியிலுள்ள விந்தைகள், உடலமைப்பு,நோய்கள்,விவசாயம் முதலியவைகளை நிழற்படம், சித்திரம் போன்றவைகளின் மூலமாகக்காண்பிக்கலாம். சங்கங்களை ஏற்படுத்தி நாட்டின் நிலைமையைப் பற்றி அறியும்படி செய்யலாம்.

O

சி. ந. சிவநாதன்
5-ம் படிவம்
பன்மக்கள் உயர்நிலைப்பள்ளி,
பீளமேடு கோவை

முதியோர் கல்விக்காக முதலில் நாம் செய்ய வேண்டியது அவர்களைச் சூழ்ந்துள்ள மூட நம்பிக்கைகளைப் போக்க வேண்டியதுதான். வானூர்தி, வானொலி, மின்சாரம் ஆகிய நூதன சாதனங்களைப்பற்றி விளக்கமாக எடுத்துக்கூறி அவற்றின் உபயோகங்களை அவர்கள் உணரச் செய்யவேண்டும், புராணங்களிலுள்ள புரட்டுக்களை—ஆபாசங்களை எடுத்துக் காட்டி அவற்றின் மீது அவர்களுக்குள்ள நம்பிக்கையை அறவே போக்க வேண்டும். உண்மையான வாழ்க்கை முறையை உணர்த்த வேண்டும். இதற்கு நாம் கைக்கொள்ள உள்ள ஒரே ஒரு கருவி திருக்குறள்தான். குறளின் பெருமை யுணர்ந்த முதியோர்கள் கல்விகற்கத் தாங்களாகவே முண்டியடித்துக் கொண்டு முன்வர மாட்டார்களா?

.... இங்கே கத்தரிக்க ....

கேள்வி எண் 6.

மக்களிற் சிலர் பிச்சை எடுப்பதைத் தடுக்க வழி என்ன?

—அ. எ. சச்சிதானந்தன், 4-ம் படிவம்
ஊரீஸ் உயர்நிலைப்பள்ளி, வேலூர் (வ. ஆ.)

விடைகள் கூபனோடுதான் அனுப்ப வேண்டும். அத்துடன் மூன்று புதிய கேள்விகளும் எழுதியனுப்ப வேண்டும். நாலஞ்சலில் அனுப்பினால் போதும். விடை 50 சொற்களில் அடங்குதல் வேண்டும்.	பெயர்........................
	வகுப்பு...........வயது........
	பள்ளி ....
	ஊர்..........................
முடிவு நாள் 5—5—49	தேதி.............கையெழுத்து

Printed By AR. Periyannan at
Senthamizh Pathippakam, Pudukkottai.
Editor & Publisher: Murugu Subramanian.